[illegible]

V.6 No. 22 1 June 1933


[illegible]211,N28 K4
N33.6.22
189180.

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6 ] 1933 ஷ ஜூன் மீ 1௳ [No. 22

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 421
2. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலம், BA.BL. 423
3. தமிழ்ப் பாடம்
நளவெண்பா-கலிநீங்குகாண்டம் 425
4. ஞான தீபம்
T. R. இராஜகோபால் - 427
5. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 2-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 429
6. காற்று மழை (அங்கம் 2. களம் 1.)
Shakespeare's Tempest 431
7. அப்பர் (64 கலை-வியாகரணம்)
E. N. தணிகாசல முதலியார் B A B.L. 433
8. யாப்பலக்கணம் (பாவினம்-குறள்தாழிசை, வெண்தாழிசை)
வித்துவான் M. V. வேணுகோபாலப்பிள்ளை 434
9. பொதிகை நிகண்டு (தி. தீ, து)
S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 435
10. வாழ்வு—(ரொஸ்ஸெ) 436
11. வர்த்தமானம் 439

## கலாநிலயம்

### கள்வரே நல்லோர் போலும் 1.

திருடனையே தண்டிப்பதற்குச் சட்டங்கள் அமைந்திருக்கின்றவரையில் இவ்வுலகம் உருப்படும் வழியில்லை. திருடப்பட்டவனைத் தண்டிப்பதே தருமம். திருடப்படுவதற் குரியவர் இருக்கின்றார்களென்றால் திருடர்கள் எங்ஙனம் இல்லாமற் போவதற்கியலும். திருட்டிற்கு உரைத்த இச்சொல் மற்றெல்லாக் குற்றங்களுக்கும் ஒக்கும். தன் பொருள்களைப் போதிய கருத்துடன் காத்துக்கொள்ளாமற் சோம்பியிருந்தமையால், திருடப்பட்டவன் தண்டனைக்குத் தகுந்தவனாகின்றான் என்னுமவ் வெளிமைச்சொல்லைத் தழுவி இன்னவாறிதனை நாம் இங்கு இயம்பவில்லை. கவலையிற் பிறந்து அவலத்தில் வளர்கின்ற கருத்தினூடு திரளும் தீமைகளுக்கெல்லாம் குறிக்கோளாயிருப்பது காவற்குறைவினால் களவு நேர்ந்தது என்னும் அச்சொல்.

பண்டை நாட்களில், தவவனம் மேவிய முனிவர் முதலிய விழுமியோரை, புலி காடி அனைய காட்டுவிலங்குகள் நலிந்ததில்லை என்னுமிச் செய்தி இந்தியர்க்குப் புதுமையன்று. தவசிகள் மலையில் ஏறுவதற்குப் படிகளாய்க் கிடக்குமாம் பாம்புகள். இக்காலக் கரவுடையநெஞ்சினர்கள் இன்னவைகளை நம்பாமல்,கட்டுக்கதையெனக் கழறியே தீர்வார். இன்னவர்க்கு ஒன்று உரைக்கலாம். இதன் உண்மையைச் சோதித்தறிதற்குரிய மேன்மையோர் இக்காலத்திலும் ஒருவர் இருவர் இலராகவில்லை. இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்திருந்த ஸ்ரீ இராம தீர்த்தர், இமயமலையின்கண் தாம் தவஞ் செய்திருந்தபோது வெம்புலி அனைய விலங்குகள் தம்மைக் கடந்து செல்லுமேயொழியத் தமதருகு வந்து எவ்வகைத் தீங்கும் புரிய முயன்றதில்லை என்று இயம்பியிருப்பதை நம்ப வேண்டாவோ; மற்று, மறக்கத்தான் மறக்கலாமோ! நலிகின்ற செய்கை புலியினதேயாயினும்,நலியப்படுவதற்குரியவோர் குற்றம் அதற்கு இரையாவோனிடத்து இருந்திருத்தல் வேண்டுமென்னற் கையம் இல்லையே.

மனிதருக்கும் புலிக்கும் இடையே காண்கின்ற இந்தத் தொடர்பே, மனிதர் தம்முள் ஊடாடுகின்ற நிகழ்ச்சிகள் அனைத்திலும் இயைந்திருக்கின்றது. கேடு நினைப்பவர்களன்றி ஒருவரும் ஒருவராலும் கெடமாட்டார். வாய்க்குவாய் சொல்கின்ற சொல்தான் இது, ஆயினும் அதன்வழி சிந்தித்து ஒழுகினாலன்றிப் பயனில்லை. இவ்வழி சிந்திப்பது எளியதொன்றன்றென்பதை உணர்வோம். மற்று, அத்தகைய சிந்தனைகள் சேர்வதற்குரிய வோர் பயிற்சியைக் கடைபிடிப்பதல்லால் மனிதர்க்கு இந்நாள் வேறோர் கடமை இருப்பதாக எண்ணுவதே பிழையாவதுமன்றி எல்லாத் தீமைகளுக்கும் இடந்தந்து நிற்கின்றது.

திருட்டிற்குரிய தன்மை, வஞ்சனை வன்சொல் கொலை அனைய மற்றெல்லாக்குற்றங்களுக்கும் ஒக்கும் எனக் கூறினோம். ஆதலின், திருடு ஒன்றினையே முதலாகப் பற்றிச் சிறிது சிந்தித்தல் இக்கட்டுரை அளவிற்குப் போதும். சட்டங்கள் தண்டிப்பதெல்லாம், திருடியதாகிய அச்செய்கையைத்தொடர்ந்தேயன்றித் திருடவேண்டுமென்ற அந்நினைவைப்பற்றியன்று.ஒரு எண்ணமும் அவ்வெண்ணத்தின்படி நிகழ்ந்த செய்

கையும் சேர்ந்தே சட்டப்படி தண்டித்தற்குரியவோர் குற்றம் ஆகின்றதென்பது உண்மையே. எண்ணமில்லாத வழி நிகழ்ந்தவோர் செய்கையை மாத்திரம் குற்றமாகக் கொண்டு தண்டிப்பாரில்லை. இது தக்கதே. தான் குடை கொண்டுவராதிருந்தும் மறதியால் வேறொருவன் குடையைப் பிடித்துக்கொண்டு போய்விடுவது களவென்னுங் குற்றமாகாது. எனினும், களவு என்னும் செய்கை நேராவிடினும், அக்களவின் எண்ணம் மாத்திரம் இருப்பது சட்டப்படி தண்டனைக்கு ஆளாக்காத காரணம்பற்றியே அதனைக்குற்றமென்று கொள்ளாமல் விடலாகாது. இதனை மனத்துட்கொண்டால், திருடப்பட்டவன் எக்காரணம்பற்றித் தண்டனைப்படத் தகுந்தவனாகி நிற்கின்றானென்பது விளங்கவரும். உலகநடையில் கருதும்வண்ணம் திருடன் கொடியவனாவதனினும், திருடப்பட்டவனே, உண்மைமுறையில், அதிகம் கொடியனாயிருத்தலுங்கூடும்.

பொதுப்படப் பேசுமிடத்து, தான் துய்த்தற்கு வேண்டுமென்ற நினைவினால் கள்வன் ஒன்றினைக் கவர்கின்றான். களவுகொடுத்தவனோ, தான் துய்ப்பதற்கு வைத்திருந்தவொன்றினை இழந்துவிட்டமைபற்றித்தான் கவல்கின்றான், கடிகின்றான். ஆதலின், இவ்விருதிறத்தோர்க்கும் இடையே பொதுவுற நிற்கும் எண்ணம், தாம் துய்த்தற்கு இன்னது வேண்டும் என்னும் அவ்வொன்றே. இவ்விருவர்களில், செய்தகாரியம் களவெனக் கருதுதற்குரியதாய் நிற்குமிடத்தும், தான் துய்ப்பதற்கன்றி, பிறருக்குப் பயன்படுத்தும் நோக்கமுடன் ஒருவன் ஒன்றினைத் திருடநேர்வது இயலலாமாயினும், "பிறருக்குப் பயன்பட நான் வைத்துக்கொண்டிருந்ததைக் களவு செய்தானே" என்று இழந்தவன் ஒருவனும் குறைகூற இயலாது. தான் துய்க்காமல் பிறர் துய்ப்பதே கருத்தாயின், கவர்ந்த கள்வன் துய்ப்பதற்கேதான் கவர்ந்தனன் ஆதலின், இக்களவினால், பொருளை வைத்துக்கொண்டிருந்தவன் எண்ணம் உண்மையாயின், அது நிறைவேறியதேயொழிய அழிந்தபடியாகாது. தான் நினைத்த காரியத்தைநிறைவேற்றியதற்காகஅக்கள்வன்பால்இவன் நன்றியுடையவனாக வன்றோ யிருத்தல்வேண்டும்! அந்நன்றி தோன்றுமாயின் பிறகு அக்காரியத்தில் களவொன்றுங் காணமாட்டான். எனின், களவு செய்யப்பட்டோம் என்று கருதுவார் அனைவரும், தாம் துய்க்க நினைத்ததை இழந்ததற்கே வெகுண்டு, அதற்குக் காரணமா யிருந்த கள்வனைத் தண்டித்துத் தம் சீற்றத்தை முடித்துக்கொள்ளவும், மறுபடி அவன் இவ்வகைக் களவுகள் செய்யாமல் தடுக்கவும் முயல்கின்றன ரென்பதற்கு ஐயம் இல்லை.

எனின், ஒரே எண்ணமுடைய இருவரில், அவ்வெண்ணம் நிறைவேறும்படி பொருளை வைத்திருந்தாகிய காரியத்தைச் செய்த வொருவனுக்குப் பரிவதும், எடுத்துக்கொண்டதாகிய காரியத்தைச் செய்த மற்றவனைத் தண்டிப்பதும் எங்ஙனம் நீதியாகுமோ யாம் அறியோம். "துய்ப்போம் என்னின் தப்புன பலவே" என்பது மாத்திரமன்றி, அவ்வெண்ணத்தால் செய்கின்ற செய்கைகள் அனைத்தும் தண்டனைக்குரியதுமாகும். இவ்வெண்ணத்தின்படி பொருளைத் தான் வைத்துக்கொண்டிருப்பதும் ஒரு செய்கை, மற்றொருவனிடத்திலிருந்து எடுத்துக்கொள்வதும் ஒரு செய்கை. செய்கை எதுவாயின் என். எண்ணமில்லாத செய்கை தண்டனைக்குரியதாகாது என்பது சட்டத்தின் நேர்மையாகலாம். இதன்படியே எண்ணந்தான் முக்கியமானதென்பது நிலைநிறுத்தப்பெறுகின்றது. எனின், செய்கை எதுவாயினும், அல்லது வெளிப்படச் செய்தசெய்கை ஒன்றுமே இல்லாவிடத்தும், எண்ணமுடைமையே தண்டிக்கப்படவேண்டுமென்பது பிரபஞ்சத்தின் நீதியாய் நிற்பதில் வியப்பொன்றுமில்லையே. ஆதலின், களவு முதலியவைகளால் பிறரால் நலியப்படுவான் ஒவ்வொருவனும் அந்தரம்நோக்கின் நிரந்தரமான அந்தப் பிரபஞ்ச விசாலமான நீதியே செலுத்தப்படுகின்றவனாகின்றான். சிறுமாநுடர் கூடிக் குழப்பும் அரசாங்கச் சட்டங்களில் சேர்க்கப்படாமையினாலேயே நந்தாத இந் நீதியின் நிலையும் செல்வாக்கும் சிதைந்துவிடுமோ!

துய்ப்பேன் என்னும் எண்ணமுடையவனது தன்மை எவ்வகைத்தென்பதை எளிதில் உணரலாமே. இவ்வெண்ணத்தால் எழுப்பப்படும் பசியோ ஆனைத்தீயினும் ஆழமானது. ஆதலின் இவ்வெண்ணம் உடையவர், காலையிலிருந்து மாலை வரையிலும், மாலையிலிருந்து காலைவரையிலும், வைகலும் வைகலும், நினைக்கின்ற நினைவைத்தான், ஒருவன் வெளிப்பட நிகழ்த்திவிட்டானாயின் அன்னான் உடனே திருடன் என்னும் பட்டத்தைச் சுமக்கவேண்டியவனாகி இப்பேதையுலகில் முடிகின்றான். கடைக்காரன் பார்க்காமல் இருக்கும்போது ஒரு கத்தரிக்காயை எடுத்து மடியிற் போட்டுக்கொண்டுவந்துவிட்டால், அது திருடென்று தண்டிக்கப்படுகின்றது. இவன் கடையிலுள்ள காய்களனைத்தும் வாங்குவாரின்றி அழுகிப் போம்படி, அவனுக்கு அயலில் ஓர் கடை வைத்து அரைவிலைக்கு விற்றால், இது வியாபாரமாம். மாதம் ஆயிரம் ரூபாய் வருவாயுடையவன் கையிலிருந்து, சோற்றுக்கு வழியில்லாத ஒருவன் ஒரு நூறுரூபாய் கவர்ந்துவிடுவதைக் களவென்னுங் குற்றத்திற்காளாக்கிக் கடியவிரைகின்றார், நன்மக்கள் என்று தம்மை நயந்து வியந்துகொள்கின்ற எத்தனையோ பலர். மற்று, போதிய வருவாய்க்குரிய பொருள் தாதை தேடிவைத்திருந்தும், ஒரு காசுமில்லாமல் குடும்பத்தோடும் மடிகின்ற நிலையிலுள்ள ஒருவனுடன், ஐம்பது ரூபாய் வேலைக்குப் போட்டியிட்டுத் தன் செல்வாக்கு முதலியவைகளால் அவ்வேலையைப் பெற்று, மற்றவனைத் தவிக்கவிடுகின்றவன் 'சாமர்த்தியசாலி' என்று பாராட்டத் தகுந்தவனாய் விளங்குவதன் பரிபவத்தையும் பாவத்தையும் நினைப்பதோ நேர்கின்றதில்லையே. இதற்குச் சட்டம் இடம் கொடுக்கின்றது, அதற்கு இடம் கொடுக்கவில்லை. இவ்வளவு தானா வேற்றுமை! இவ்வேற்றுமையை மட்டுமே மறக்காமல் ஒழுகினாற் போதுமோ! "சட்டத்தின்படி இது சரி' என்ற நினைவினும் பாதகம் வேறொன்றில்லை. 'வெனிஸ் வர்த்தகன்' என்னும் ஷேக்ஸ்பியர் நாடகத்தில், இரக்கமிலி அத் தீயோன் ஷைலாக் என்னும் யூதன் சொன்னசொல் இது ஆவதை, மக்களென்று தம்மை நினைக்கவிரும்புபவர் மறக்கமாட்டார்.

**விரைவில் நேராகும் என நம்பி, பத்திரிகை சிறிது காலங்கட[illegible]வதை நமது நண்பர்கள் பொறுத்துக்கொள்வார்கள் என்று நினைக்கின்றோம் [illegible] "மேனேஜர்"**



# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[384-வது பக்கத் தொடர்ச்சி]

தன்னலத் தறமெலாந் தவறி விட்டதே

**மா**துல னுறவும் மரபெனுங் கருத்தும் மூர்க்கருக்கேது! மாரீசன் பகர்ந்த தொன்றும் இராவணன் மனதில் இறங்கவில்லை. ஆதலின்,

என்னவுரை யத்தனையு மெத்தனையு மெண்ணச்
சொன்னவனை யேசின வரக்கர்பதி சொன்னான்
அன்னையுயிர் செற்றவனை யஞ்சியுறை கின்றாய்
உன்னையொரு வற்கொருவ னென்றுணர்கை நன்றோ

[தான் சொன்ன வார்த்தைகள் அனைத்திலும் ஒரு சிறிதேனும் எண்ணிப்பார்க்கும்படி வேண்டினவனாகிய மாரீசனை ஏசினவனாகி இராவணன் பதில்சொல்வான்—"உன் தாயாகிய தாடகையின் உயிரைக் கொன்றவனுக்கு அஞ்சி இங்கு ஒளிந்துகிடக்கின்ற உன்னை ஒருவனாக மதிக்கத் தகுமோ]

திக்கய மொளிப்பநிலை தேவர்கெட வானம்
புக்கவ ரிருக்கைபுகை வித்துலகம் யாவும்
சக்கர நடத்துமெனை யோதயர தன்றன்
மக்கணலி கிற்பரிது நன்றுவலி யன்றோ

[எட்டுத் திக்கிலும் உள்ள யானைகள் எனக்கு அஞ்சிப் போய் ஒளித்துக்கொள்ளச்செய்தும், தேவர்கள் நிலைகுலைந்தவர்களாகி வானத்திற் புகுந்துகொண்டபோது அவர் இருப்பிடத்தைக் கொளுத்தியும், எல்லா உலகங்களிலும் ஆக்கினை செலுத்துகின்ற என்னையோ தயரதனுடைய மக்கள் வென்று வருத்துவது அரிது. அவ்வாறு செய்வாரெனின், என் வலிமை நன்றாயிற் றன்றோ]

மூவுலகி னுக்குமொரு நாயக முடித்தேன்
மேவலர்கி டைக்கினிதன் மேலினிய துண்டோ
ஏவல்செய் கிற்றியென தாணைவழி யெண்ணிக்
காவல்செ யமைச்சர்கட னீகடவ துண்டோ

[மூன்று உலகத்திற்கும் ஏகசக்ராதிபதி யாயினேன். இப்பொழுது எனக்குத் தகுந்த பகைவர் கிடைப்பாரானால் அதனினும் மகிழ்வதற்குரியது வேறொன்று உளதோ. என் கட்டளையை எண்ணி நான் ஏவியதைச் செய்யக் கடவாய். இதுதான் காவல்செய்கின்ற அமைச்சர்களுக்கு உரிய கடமை; அதனை நீ கடக்கலாமா]

மறுத்தனை யெனப்பெறினு நின்னைவடி வாளால்
ஒறுத்தென மனக்குறை முடிப்பதொழி கல்லேன்
வெறுப்பன கிளத்தலுறு மித்தொழிலை விட்டென்
குறிப்பின்வழி நிற்றியுயிர் கொண்டுழலி னென்றான்

[அன்றியும், என் ஏவலைச் செய்ய மறுத்தாயாயின், உன்னைக் கூரியவாளினால் வெட்டித் தண்டித்துவிட்டு என் மனக் குறையை முடிக்காமல்விடமாட்டேன். ஆகையால், நீ உயிரைக்கொண்டு திரியவேண்டுமாயின், எனக்கு வெறுப்பான சொற்களைச் சொல்லும் இக்காரியத்தை விட்டு என் கருத்திற்குஇணங்கி நில்—என்று (இராவணன் மாரீசனைப் பார்த்து) சொன்னான்]

கேட்டனன் மாரீசன். அறத்துறை பேசுதனினும் சூழ்ச்சித் திறத்தினால் சில புணர்ப்பதே தன் னுயிரினுக்கு உறுதியாய் இனி நிற்கவல்லதென்று நினைக்கத் தலைப்பட்டவனாயினன். ஆகி,

உன்வயி னுறுதி நோக்கி
யுண்மையி னுணர்த்தி னேன்மற்
றென்வயி னிறுதி நோக்கி
யச்சத்தா லிசைத்தே னல்லேன்
நன்மையுந் தீமை யன்றோ
நாசம்வந் துற்ற போது
புன்மையி னுற்ற நீராய்
செய்வது புகறி யென்றான்

[உன்னுடைய நன்மையைக் கருதி உண்மையாக உனக்கு அறிவுறுத்தினேன். அல்லாமல், எனக்கு வருந் தீமையைக் கருதி அச்சத்தால் இவைகளை நான் கூறவில்லை நாசகாலம் வந்துவிட்டால் நல்லதும் தீயதாக முடியுமன்றோ! அற்பத்தன்மையுடையவனே, இனிநான் செய்ய வேண்டியதைச் சொல்—என்றான்]

மாதுலன் இணங்கிவரும் இம்மொழிகளைக்கேட்ட இராவணன் வெகுளி நீங்கி, பொங்கிய உவகையனாய் எழுந்து அவனைப் புல்லி, "மன்மதனது அம்புகளாற் சாவதனினும் இராமனது பாணங்களால் மாள்வதே எனக்குப் புகழும் பெருமையும் ஆகும். இனி, தென்றலை எனக்குப் பகையாகச் செய்த சீதையை நான் அடையும்படி செய்வாயாக" என்ன வேண்டலும், அன்னதற்குத் தான் புரியவல்ல வினை யாதென வினவிய மாரீசனுக்கு இராவணன், "மாயையால்வஞ்சித்தன்றோ வௌவுதல் அவளை" எனச் சாற்றினன்.

இதற்கு இணங்கி இராமனை வஞ்சிக்கப் புகுந்தால் அவனது செஞ்செல் அனைய சுடுசரத்தால் தன் உயிர் போம்; இணங்காவிடின் இராவணனது வடிவாள்கடிய நிற்கின்றது; இந்நிலையில் என் செய்வான் மாரீசன். இதுகாறும் "என்வயின் இறுதிநோக்கி அச்சத்தால் இசைத்தேனல்லேன்" என்றிவன் இராவணனுக்கு விளிம்பிய தனைத்தும் பொய். "உன்வயின் உறுதிநோக்கி உணர்த்தினேன்" என்றது உண்மையாயிருக்கலாம்; ஆயினும், இவன் இராவணனுக்கு உறுதிநாடியதெல்லாம் தனக்கு இறுதி வாராமல் காக்கவேயன்றி வேறன்று. கும்பகருணனை யழைத்துப் பிற்றைநாள் இராமனுடன் போருக்கேகுமாறு இராவணன் ஏவியபோது, அத்தம்பி ஆவன கூறி அறிவுறுத்தவுங் கேளாமல் வெகுண்டு ஏசிய முன்னோனைப் பணிந்து, "ஐயனே, வெகுளேல், வெம்போர்க்கு இன்றே செல்கின்றேன்; ஆயினும் செல்லுமுன் உனக்குஉணர்த்துதற்கொன்றுளது, கேள்" என்று,

வென்றிவண் வருவெனென் றுரைக்கி லேன்விதி
நின்றது பிடர்பிடித் துந்த நின்றது
பொன்றுவென் பொன்றினால் பொலன்கொள் தோளியை
நன்றென நாயக விடுக நன்றரோ

என, "நான் போர்தோற்று இறந்தபின்னேனும் நீ இராமனை வெல்வது அரிதென உணர்ந்து சீதையை விட்டு உன் இனிய உயிரை நன்று காத்துக்கொள்வாயாக" என வேண்டினன். அவனன்றோ இராவணனுடைய நன்மையையே காத்துத் தன்னுயிர்க் கிறுதியை எண்ணாத உத்தமன்; மாரீசன் அவ்வண்ணத்தனல்லன். இதுகாறும், தனக்குத் தீமைநேராமற் காக்கும்பொருட்டே இராவணனது நன்மையை எடுத்தியம்பிவந்த இவன், இனி இச்சூழ்ச்சி செல்லாமையுணர்ந்து, இராவணனது இறுதியிலேயே தன்னுறுதி

தங்கியதாகும் பரிசினை ஆராய்ந்தனனாய், இராவணன் இக்கணமே முடிவடையவல்ல ஓர் உபாயம்சூழ்தலுற்றான். சூழ்ந்து, வஞ்சனையால் சீதையை வௌவுதல் வேண்டுமென்ற இராவணனை நோக்கி,

புறத்தினி யுரைப்ப தென்னே
புரவலன் றேவி தன்னைத்
திறத்துழி யன்றி வஞ்சித்
தெய்துதல் சிறுமைத் தாகும்
அறத்துள தொக்கு மன்றே
யமர்த்தலை வென்று கொண்டுன்
மறத்துறை வளர்த்தி மன்ன
வென்னமா ரீசன் சொன்னான்.

[அரசனே, இனி நான் வேறென்ன சொல்வதற்குளது. இராமனது மனைவியை உன் திறமையினால் அல்லாமல் வஞ்சித்து அடைதல் உன் பெருமைக்குக் குறைவுண்டாக்கும். இராமனைப் போரிலே வென்று சீதையைக் கைக்கொண்டு உன் வீரத்தின் புகழை வளர்ப்பதே தக்கது. இது அறம்போலவும் தோன்றும், என்று மாரீசன்சொன்னான்]

மேற்பார்வைக்கு இதுவுந் தக்கதேபோற் றோன்றலாம். போரிலே வென்று ஓர் மாதினை அடைவதும் அறமென நினைத்தலுண்டு. ஆதலின், இராவணன் தன் ஆசையைப் பெறுவதோடு புகழையும் பெருக்குமாறு காட்டுவான்போல் மாரீசன் கபடமாய்க் கூறினான். பொய்ந்நின்ற நாவுடைய இராவணன் இன்னதற் கேற்றவோர் விடையியம்பத் தாழ்ந்திலனாகி,

ஆனவ னுரைக்க நக்க
வரக்கர்கோ னவரை வெல்லத்
தானையும் வேண்டு மோவென்
றடக்கைவா டக்க தன்றே
ஏனைய ரிறக்கிற் றானுந்
தமியளா யிறக்கு மன்றே
மானவ ளாத லாலே
மாயையின் வலித்து மென்றான்.

[தனக்கு வேண்டியவனான மாரீசன் அவ்வாறு சொல்ல அதுகேட்டுச் சிரித்த அரக்கர் தலைவனான இராவணன், "அவர்களை வெல்வதற்குச் சேனையும் வேண்டுமோ, என் பெரியகையிலுள்ள வாள் ஒன்றே போதாதோ? ஆயினும், இராமனும் இலக்குவனும் இறந்துவிட்டால், தனிமையை அடைந்த அவளும் அந்தத் துயரத்தால் உடனே இறந்துவிடுவாளன்றோ! மேலும், மான் என்பதற்கு உரியவளாகி அவள் இருப்பதால், வஞ்சனையால் (வலைபோட்டு மானைப் பிடிப்பதுபோல்) அவளைக் கைப்பற்றுவோம்"— என்றான்]

மான் என்பதற்கு ஏற்பச் சீதையை மாயையாலேயே பற்றுவோம் என்று இவன் வலிந்து செய்யும் பரிகசம் ஒருபுறமிருக்க, முன்னும் பின்னும் முரண்படப் பேசுந் தன் பொய்யை இத்தசமுகன் எங்குக் கொண்டுபோய் மறைப்பது. சீதையும் உடன் மாள்வாள் என்றஞ்சியே இராமனைப் பொருதுகொல்ல விழைந்திலன்போல் இங்குப் பேசுமிவன், முன்,

வெப்பழியாதென்னெஞ்ச முலந்தேன் விளிகின்றேன்
ஒப்பழிவென்றேபோர்செயலொல்லேனுடன்வாழுந்
துப்பழிசெவ்வாய்வஞ்சியைவௌவத்துணைகொண்
டிப்பழி நின்றற் றீரிய வந்தேன் [டிட்

எனப் பகர்ந்தவனேயன்றி வேறல்லன். தனக் கிணையல்லனென இராமனுடன் சமர்செய்ய நாணினனும்; ஆயினும் அருமைத் தங்கையின் ஒருமூக் குகுத்தபழி தீர்தல் வேண்டுமாம்; அன்னதற்கே சீதையைவௌவ நினைத்தனனும். இதுவேஉண்மையில் இவன் நினைவாயின், இப்பொழுது சீதை இறந்துபட்டாளெனின், அதனால் இவனுக்குஎன். அல்லது "இராமன் தனக்குப் போரிணை யாகமாட்டான்" என்ற அந்தக் காரணத்தையும் மீண்டுமிங்கு உரைத்திருந்தாற்றலென்? இப் பின்னது இயல்வ தருமை. ஏனெனில், பொய்யைப்போல் தன்னைத்தானே மறந்துவிடுவது வேறொன்றுமில்லை. முன்னே சொன்னது பொய்யாதலின் அதனைமறந்து இப்பொழுது வேறொரு பொய் வந்தது. ஒரு வாயுடைய மனிதரே சொல்லிரண்டு புகல்கின்றாரெனின், வாய்கள் ஓர் பத்துடைய அரக்கன் வேறுவேறு புகல்வது ஓர் புதுமையன்று. இதனாற்றான் இதற்குப் பத்துமாதங்களுக்கப்பால் இறந்து கிடந்த தன்னொரு மைந்தன் இந்திரசித்தின் உடலத்தைத் தழுவிக்கொண்டு வாய்கள் பத்தும் வேறுவேறு புலம்பி அழவேண்டி நேர்ந்தது.

இன்னுமொன்று இங்குக் கருதுதற்குளது. சற்று முன்தான், இராமனது ஆற்றலை எடுத்தியம்பித் தன் மருகனை அச்சுறுத்த நினைத்த மாரீசனுக்கு எதிராக, "மேவலர்கிடைக்கின் இதன்மேல் இனியதுண்டோ" என்று விளம்பியுளன் இராவணன். சீதையின் நட்பிற்கு இவன் நயந்த தெல்லாம் அவலமாயிற்றெனினும், மேவலரை விரும்பிய இவன் ஆசையோ வேட்கைக்கு மேற்படவே வந்து கைகூடியதைப் பின்னர் உணர நிற்கின்றான். முதனாள் போர்தோற்று நிமிர நோக்கத்தலைகளுடன் வெங்களம்நீங்கிவந்து மாலியவானிடம், "நாசம்வந் துற்ற போது நல்லதோர் பகையைப்பெற்றேன்" என இவன் வாய்கள் பத்தும் ஒன்றுபடப் பறைதற்குள. "மேவலர் கிடைக்கின் இதன் மேல் இனியதுண்டோ" என்று இப்பொழுதுஇவன் தான் இங்குரைத்ததும், அதற்கு மாரீசன், "நன்மையுந் தீமையன்றோ நாசம்வந் துற்றபோது" என எதிர் குறித்ததும் அப் பத்துத்திங்கள்களுக்கப்பால் தன் நினைவில் வர, இரண்டையும் ஒன்று சேர்த்து, "நாசம்வந் துற்றபோது நல்லதோர் பகையைப் பெற்றேன்" என்று முடிக்கலாயினான் போலும்.

இது இடைப்பிறவரல். இன்னவாறு போரிற்குடன்படாவகைவிளம்பிய இராவணன் றன்மெய்யே போல் மாரீசன் தன் உயிரும் சிதையக் காண்பானாகி,

தேவியைத் தீண்டா முன்ன
மிவன்றலை சரத்திற் சிந்திப்
போம்வகை புணர்ப்ப னென்று
புந்தியாற் புகல்கின் றேற்கும்
ஆம்வகை யாயிற் றில்லை
யார்விதி விளைவை யோர்வார்
ஏவது செய்வ தல்லா
லில்லைவே றென்றெண் ணா

[சீதையைத் தொடுவதன்முன் இவன் தலைகள் இராமபாணத்தால் அறுந்து விழுந்துபோகும்படி செய்யலாம் என்று தந்திரமாகச் சொல்கின்ற எனக்கும் இது கைகூடும்படி நேரவில்லை. விதியின் பயனை யார் அறியக்கூடும். இனி இவன் ஏவியதைச் செய்வதன்றி வேறே ஒன்றுமில்லை என்று எண்ணி]

என்னமா மாயம் யான்மற்
றியற்றுவ தியம்பு கென்றான்
பொன்னின்மா னாகிப் புக்குப்
பொன்னைமால் புணர்த்து கென்ன



அன்னது செய்வ னென்னா
மாரீச னமைந்து போனான்
மின்னும்வே லரக்கர் கோனும்
வேறொரு நெறியிற் போனான்

[நான் என்ன பெரிய மாயம் புரியவேண்டும் சொல், என்று மாரீசன் கேட்க, இராவணன், பொன்மயமான மானாகிப் புகுந்து சீதைக்கு ஆசை உண்டாகும்படி செய், என்று சொல்ல, அப்படியே செய்வேன் என்று ஒவ்வி மாரீசன் போனான்; மின்னுகின்ற வேலையுடைய இராவணனும் வேறொரு வழியிற் சென்றான்]

மாரீசன் அறமே நோக்கி இராவணனுக்கு அறிவுரைகள் கூறி அவ்வறத்தாற்றில் அவனுக்கு உறுதியை நாடினான் என்று நாம் எண்ணும்படி பாசுரங்களை முன்னெல்லாம் அமைத்து வந்த கம்பர், இறுதியில் அத்தனையும் அவன் தன்னுயிரைக் காத்துக் கொள்ளுமாறு செய்தவொரு சூழ்ச்சியே என்பது விளங்க ஒரு நொடியில் மாற்றிய இந்நாடகத் திறைமை நனி வியக்கத் தகுந்தது. மாரீசன் உரைத்த அவ்வளவும் ஈறில் நல்லறங்களே. இராமனது ஆற்றலைப் பற்றி இவன் இயம்பிய வனைத்தும் உண்மையே. ஆயினும், தன்னுயிரிற்கு இறுதி வாராமற் காப்பதற்குரிய கருவிகளாகவே அவைகளைக் கையாள நினைத்தானன்றி, தருமமும் மேன்மையும் தசமுகன் நன்மையும் கெடாவண்ணம் காக்குங் கருத்தினால் கழறினானல்லன். தலைகள் சிந்திப்போம்படி இராமனோடுபோரிற்குத் தூண்டிய வஞ்சனையைத் தானே ஒப்புக்கொண்டகயவன் இவன் இதுகாறும் மேலான அறத்தையும் அறிவையும், தன் வயிறும் உயிரும் சரியாவண்ணம் சுமப்பதற்கியன்ற சிறு சூழ்ச்சிகளாகவேகருதிக் கையாண்டான். ஆதலாற்றான் பேசிய அவ்வறம் அவனுக்கு உதவாமற் போயிற்று. இராவணனுக்கு முன் தானே உயிரிழந்தான். அறம் பேசுவோ ரெல்லோரும் அறவோ ரல்லர். அறத்தைக் காப்பதற்கன்றி, அறத்தினால் தம்மையே காத்துக்கொள்ளப் பேசுதனினும் நயவஞ்சகம் வேறில்லை.

## தமிழ்ப் பாடம் 72.

### நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[412-வது பக்கத் தொடர்ச்சி]

கலிபுருடன் அகன்றபின் வீமராஜன், நளன் முதலியவர்களுக்கு நல்விருந்து செய்து கொண்டாடுவதும், அயோத்திமன்னன் நளன்பால் விடைபெற்றுத் தன்னூர்க்கு ஏகுவதும், நளன் தன் மனைவிமக்களோடு மாவிந்தம்நோக்கிப் புறப்படுவதும் இனிவரும் நான்கு செய்யுள்களில் அடங்கிய விஷயமாம்.

---

வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கட்
கோதையையு மக்களையுங் கொண்டுபோய்த்—தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி
விதையக்கோன் செய்தான் விருந்து. 80.

பொழிப்புரை:—மகரந்தம் மறைந்து அமிழும்படி தேன் பாய்ந்து ஒழுகும் பூஞ்சோலைகளையுடைய விதர்ப்பதேசத்து அரசனாகிய வீமராஜன், வேதநெறி தவறாத நளவேந்தனையும் அழகிய விசாலமான கண்களையுடைய தமயந்தியையும், அவர் மக்களையும் அழைத்துக்கொண்டுபோய் விருந்துசெய்தான்.

---

உன்னையா னென்று முணரா துரைத்தவெல்லாம்
பொன்னமரு மார்ப பொறுவென்று—பின்னைத்தன்
மேனீர்மை குன்றா வெறுந்தேர் மிசைக்கொண்டான்
மானீ ரயோத்தியர் மன். 81

பொழிப்புரை:—பெருமை பொருந்திய நீர்வளமுடைய அயோத்தி அரசனான இருதுபர்னன், "திருமகள் தங்கிய மார்புடையவனே, ஒன்றுந் தெரியாமல் நான் உன்னைச் சொன்னவைகளையெல்லாம் பொறுத்தருள்வாய்" என வேண்டிக்கொண்டு பிறகு தன்னுடைய மேல் நீர்மை குன்றா வெறும் தேர் ஏறிப் புறப்பட்டான்.

விரிவுரை:—"தன் மேல்நீர்மைகுன்றா வெறுந்தேர் மிசைக் கொண்டான்" என்னும் இவ்வாக்கியம் பல பொருள்களைத் தந்து நிற்கக்கூடும். 'குன்றா' என்ற சொல் செய்யா என்னும் வாய்பாட்டில் இருப்பதால், அது உடன்பாட்டு வினையெச்சமாக இருக்கலாம், எதிர்மறை வினையெச்சமாக இருக்கலாம், அல்லது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாக இருக்கலாம். ஆதலின், இம்மூன்றினில் அதனை எதுவாகக் கொள்கின்றோமோ அதற்கேற்றபடி பொருள் வேறுபடும்.

எதிர்மறைப் பெயரெச்சமாகிய குன்றாத என்ற சொல், ஈறுகெட்டுக் 'குன்றா' என நிற்கின்றதென்று கொள்வோம். ஆயின் அது, தேர் என்னும் பெயர்ச் சொல்லைத் தழுவி முடியும். எனின், இருதுபர்னன் தன், "மேல்நீர்மை குன்றாத வெறுந் தேர்மீது ஏறினான்," என்று அவ்வாக்கியம் ஆகின்றது. மேல் நீர்மையாவது, தேரினது மேல்புறத்தில் செய்திருக்கின்ற அலங்காரத் தன்மை; அது குறையவில்லை. ஆனால் தமயந்தியை உடன் அழைத்துப்போக வந்த தேராதலால் இப்பொழுது அவளில்லாமையால் உள்ளேபொலிவின்றி இருதுபர்னன் கண்ணுக்கு வெறுந் தேராக அது தோன்றுகின்றது. மேல் தோற்றத்திற்குத் தேர் என்னுந் தன்மைக்கு உரியதாயிருந்தாலும் இருதுபர்னனது மனநிலையின்படி உட்புறம் வறிதாயிருக்கும் தன் தேரில் அவன் ஏறினான் என்ற பொருளை, (குன்றா என்பதை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாய்க் கொண்டால்) பெறுவோம்.

இனி அதனைக் குன்றாமல் என்ற பொருளில் எதிர்மறைவினையெச்சமாக வைத்துப்பார்ப்போம். நீர்மை என்பதற்கு, முறைமை ஒழுங்கு அல்லது ஒப்புரவு என்ற பொருள் உளது. மேல் நீர்மை, என்பது ஆதலால்வெளிக்குக்காட்டும் முறைமை(External-manners) என்று பொருள்படும். தன் மேல்நீரமை குன்றாமல் வெறுந்தேர் ஏறினான், என்பதற்குத் 'தமயந்தி வராத வெறுந் தேரில் ஏறவேண்டி யாயிற்றே' என்று மனம் சலித்தானாலும் வெளிக்குச் செய்ய வேண்டிய முறைப்படி, வந்தனம்செலுத்தல் விடை

கொள்ளல் முதலியன ஒன்றுங் குறையாமல் செய்து தேரில் ஏறினன், எனப் பொருள் காணலாம்.

அல்லது, குன்று என்பதைக் 'குன்றி' என்றஉடன்பாட்டுவினையெச்சப் பொருளிற் கொண்டால், 'மேல்' என்பதை உயர்ந்த என்ற பொருளிலும், 'நீர்மை' என்பதைக் குணம் என்ற பொருளிலும் வைத்து, தமயந்தியை இரண்டாம் சுயம்வரத்தில் கொள்ள விழைந்தது மல்லாமல், தன்மேல் எறிகின்றமாலை முன் நளன்மேல் விழுந்தது என்று விளம்பிய இடம்பப்பொய்யும் வெளிப்பட்டதால், இப்பொழுது தன்னுடைய உயர்ந்த குணம் குறைந்து திரும்பினன், என்று அவ்வாக்கியத்திற்கு அர்த்தம் செய்யலாம். குணந்தான் குறைந்ததென்றால் தேரேனும் நிறம்பியதோ எனின் அதுவும்—வெறும் தேர்.

மேல்நீர்மை, என்பதற்கு, மேலே தோன்றும் தன்மை, அதாவது உடல் என்று பொருள்கண்டு, 'உடல் குன்றித் தேர் ஏறினன்' என்றும் கருதலாம். 'அவமானத்தால் உடல் சிறுத்துப்போயிற்று' என்ற உலகவழக்கும் இருக்கின்றது.

---

வில்தானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்லப்
பொற்றேர்மேற் றேவியொடும் போயினன்—முற்றும்
றேனீ ரளித்தருகு செந்நெற் கதிர்விளைக்கு [பற்
மாநீர் நிடதத்தார் மன். 82

பதவுரை.

முற்று - முதிர்ந்த
ஆம்பல் - ஆம்பல்மலர்களினது
தேன் - தேனாகிய
நீர் - நீரை
அளித்து - பாய்ச்சி
அருகு - அருகிலுள்ள
செம்நெல் - செந்நெல்லின்
கதிர் - கதிர்களை
விளைக்கும் - விளையச் செய்கின்ற
மா - சிறந்த
நீர் - நீர்வளப்பமுடைய
நிடதத்தார் - நிடததேசத்தவர்க்கு
மன் - அரசனாகிய நளன்,
வில் - வில்லை ஏந்திய
தானை - சைனியங்கள்
முன் - முன்னே
செல்ல - செல்லவும்,
வேல் - வேல்களைத் தாங்கிய
வேந்தர் - அரசர்
பின் - பின்னே
செல்ல - வரவும்,
பொன் - பொன்னாற்செய்த
தேர்மேல் - தேரின்மேல்
தேவியொடும் - தன்மனைவி தமயந்தியோடு
போயினன் - போனான்.

குறிப்பு:—இந்தச் செய்யுளில் வந்துள சில தொடர்களுக்கு இலக்கணம் பார்த்துப் பயிலலாம்.

வில் தானை, வேல் வேந்தர்—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள். வில்லைத்தாங்கியதானை. வேலைத் தாங்கிய வேந்தர் என விரியும்.

பொன் தேர்—மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. பொன்னால் செய்த தேர் என விரியும்.

தேவியொடு போயினன்—மூன்றும் வேற்றுமை தொகாநிலைத் தொடர். ஒடு என்பது உடனிகழ்ச்சிப் பொருளில் வருகின்ற மூன்றும் வேற்றுமை உருபு. அது விரிந்து வந்திருக்கிறது. ஆகையால், தொகாநிலைத் தொடர்.

முற்றுஆம்பல்—முற்றிய என்று இருக்கவேண்டிய பெயரெச்சம் காலம் காட்டாமல் முற்று என்று நிற்பதால், இத்தொடர் வினைத்தொகை.

ஆம்பல்தேன்—ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.

தேன்நீர்—தேன் ஆகிய நீர் என விரியுமாதலால், இது பண்புத்தொகை.

நீர் அளித்து—இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். நீரை அளித்து என விரியும்.

செந்நெல் — செம்மை யாகிய நெல் — பண்புத்தொகை. நெற்கதிர்—ஆறும் வேற்றுமைத் தொகை. கதிர்விளைக்கும்—இரண்டாம் வேற்றுமைத் தொகை. நிடதத்தார் மன்—நான்காம் வேற்றுமைத் தொகை. இது நிடதத்தார்க்கு மன், என நான்காம் வேற்றுமை 'கு' விகுதியேபெறும், முறைப்பொருள்.

---

தானவரை வெல்லத் தரித்தநெடு வைவேலாய்
ஏனைநெறித் தூரமினி யெத்தனையோ—மானேகேள்
இந்த மலைகடந் தேழுமலைக் கப்புறமா
விந்தமெனு நம்பதிதான் மிக்கு. 83

பொழிப்புரை:—“அசுரர்களை வெல்லும்பொருட்டுப் பிடித்திருந்த பெரிய கூர்மை பொருந்திய வேலாயுதத்தைக் கையிற் கொண்டவனே, இன்னும் நாம் கடக்கவேண்டிய வழி எவ்வளவு தூரம் இருக்கின்றதோ?" என்று தமயந்திகேட்க நளன், “மான்போன்றவளே கேள். இந்த மலையைக் கடந்தபின் இருக்கும் ஏழு மலைகளுக்கு அப்புறம் இருப்பது மாவிந்தம்என்னும் நமது சிறந்த நகரந்தான்" என்று அவளுக்குப் பதிலுரைத்தான்.

விரிவுரை:—அசுரரை நளன் வென்றதாகச் சரித்திரம் இல்லை யாதலால் அவனைத் தமயந்தி இவ்வாறு அழைத்ததற்கு அமைதி காணவேண்டும். 'அசுரரைக் கொல்லும்பொருட்டு வேலை ஏந்திய குமரக்கடவுளே' என்று தமயந்தி நளனை இங்கு அழைத்தாள் என்று சிலர் கொள்ளுவார். முருகனைப்போன்றவனை முருகனே என்று அழைப்பது வழுவன்று. இந்தப்பொருளில், “தானவரை வெல்லத் தரித்த நெடு வேல்" என்ற அடைமொழிகள், முருகக்கடவுள் கையிலிருக்கும் வேலைக் குறிக்குமேயன்றி நளனுடைய வேலாயுதத்தைப் புகழவந்தவைக ளாகா. அல்லது, நளன் கையில் வைத்திருக்கின்ற வேலாயுதத்தையே அவை குறிப்பதாகவும் கொள்ளலாம். வீரசேன மகாராஜன் மகன் நளன். இந்திரனை வென்று அவனுடைய செல்வத்தையெல்லாம் கவர்ந்துகொண்ட அசுரர்களோடு அவ்வீரசேன மகாராஜன் ஒரு காலத்தில் சண்டையிட்டுச் செயித்து இந்திரனுக்கு உதவி புரிந்திருக்கின்றானென்பது நைடதத்தில் தெரிகின்றது. அந்த நூலில், நாரதர் சொற்கேட்டுத் தமயந்தியின் சுயம்வரத்திற்குப் புறப்பட்ட தேவர்கள் வழியில் நளராஜனை எதிர்ப்பட்டபோது, இந்திரன்,



அரத்தமுண் டொளிரும்வா ளவுணர்ச் செற்றுநந்
திருத்தகு செல்வமுஞ் சிறப்பு நல்கிய
விரைத்துண ரலங்கலான் வீர சேனன்போன்
றிருத்தலா லிவனள னென்ன வேண்டுமால்

என்று சொல்கின்றான். 'இரத்தத்தைக் குடித்துப் பிரகாசிக்கின்றவாள்களையேந்திய அசுரர்களைக்கொன்று, நம்முடைய செல்வத்தையும் சிறப்பையும் நமக்கு மறுபடியும் கொடுத்தவனாகிய அந்த, வாசனைபொருந்திய பூங்கொத்துக்கள் கட்டிய மாலையை அணிந்த வீரசேனனைப்போல் இவன் இருப்பதால், இவனை அவன் மகனாகிய நளன் என்று எண்ணவேண்டும்', என்று இந்திரன் ஊகித்தான் என்பது இச் செய்யுளின் பொருள். ஆதலான் வீரசேனனது கையிருந்த வேல் “தானவரை வெல்லத் தரித்த நெடு வை வேல்." தந்தைக்குப்பின் அவ்வேல் நளனை அடைந்திருப்பது இயற்கை, எனவே இவனைத் தமயந்தி அவ்வாறு அழைத்தாள்.

இனி, முன்னோர் செய்த செயல்களை அவர் மக்கள் செய்தவைகளாகவே பாராட்டி இம்மக்களைப் புகழ்வது கவிகளுக்கு மரபு. இந் நளவெண்பாவிலேயே, சுயம்வரகாண்டத்தின் 126-வது செய்யுளில், 'ஆழி வடிம்பலம்ப நின்றான்' முதலிய குறிப்புக்கள் பாண்டிய வமிசத்து வெவ்வேறு அரசர்களுக்குப் பொருந்தியவைகளாயிருக்க, அவைகளை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து. அச்சுயம்வரமண்டபத்தின்கண் வந்திருந்த அரசனது செயல்களாகச் சொல்லியதே இந்தக் கவி மரபிற்கு நல்ல உதாரணமாகும்.

இவைகளன்றி, தானவரை என்பதற்கு அசுரரை என்ற பொருள் கொள்ளாமல், தான—வரை, என அதனைப்பிரித்து, மதஜலம் பொழிகின்ற மலைபோன்ற யானை, எனவும் அர்த்தம்கொள்ளலாம். அப்பொழுது அவ்வாக்கியம், “பகைவர்களது மதயானைகளை வெல்லுதற்கு ஏந்திய நீண்ட கூரிய வேலாயுதத்தை உடையவனே," என்ற அர்த்தத்தைத் தரும். தானவரை என ஒரு சொல்லாகக் கொண்டால் அது இரண்டாம் வேற்றுமை விரியாகவும், தான+வரை என இரண்டு சொற்களாகப் பிரித்தால், வரை என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகையாக அமையும். வரை என்ற மலையின் பெயர் மலைபோன்ற யானையை உவமை ஆகுபெயராகிக் குறிக்கலாயிற்று.

இலக்கணம்

ஒன்றற்கு ஒன்று, செயப்படுபொருள் கருவி பொருட்டு எல்லை கிழமை இடம் என்னும் கருத்துக்களால் சம்பந்தம் ஏற்பட்டிருக்கின்றதென்பதைக் காட்டுவதற்கு வருகின்ற உருபுகள் வேற்றுமை உருபுகள். அவ்வுருபுகள் மறைந்திருக்க இரண்டு சொற்கள் தொடருமாயின் அத்தொடர் வேற்றுமைத் தொகை.

இரண்டு சொற்களுக்குப் பண்பினால் உண்டாயிருக்கும் சம்பந்தத்தைக் காட்டும் உருபு ஆகிய, என்பது. இதனைப் பண்பு உருபு என்பர். அப்பண்பு உருபு மறைந்திருக்கின்றதொடர் பண்புத் தொகை.

தாமரை போன்ற கண். கிளிபோல் கூவினள். மதியம் அன்ன முகம். கற்பகம் ஒப்பக் கொடுத்தான். என்ற வாக்கியங்களைக் கவனித்தால், தாமரைக்கும் கண்ணிற்கும், ஒன்றற்கு ஒன்று உவமையாய் இருப்பதால் சம்பந்தம் ஏற்படுகின்றதென்பது எளிதில் தெரியவரும். அப்படியே, கிளிக்கும் கூவுதற்கும் இருக்கின்ற சம்பந்தம் உவமையாலேயே ஏற்படுகின்றது. மற்ற உதாரணங்களிலும் அவ்வுவமைச் சம்பந்தத்தைக் காணலாம். இப்படி இரண்டுசொற்கள் உவமையால் சம்பந்தப்படுகின்றன என்பதைக் காட்டுவன, போன்ற போல அன்ன ஒப்ப, முதலிய சொற்களாம். இவைகளை உவம உருபு என்பர். உவம உருபு மறைந்திருக்க இரண்டு சொற்கள் உவமைப்பொருளில் சம்பந்தப்பட்டு நடக்குமாயின் அத்தொடரை உவமத்தொகை என்பர்.

தாமரைக்கண், கிளி கூவினள், மதிமுகம், கற்பகக் கொடை, என்பன போன்றவை உவமத்தொகைக்கு உதாரணங்கள். பவள வாய், பிறைநுதல், துடியிடை, மரையடி போன்றவைகளும் உவமத்தொகைகளே

இனி, உம்மைத் தொகையின் தன்மையைக் காண்போம்:

இரவு பகல் நானுன்னை மறப்பதில்லை—வீரர் கத்தி கேடகம் தாங்கி வந்தனர்—தாய்தந்தையரை வணங்கினன்—இரண்டேகால் வீசை நெய் வாங்கினன்—தயரதனுக்கு இராம லக்ஷ்மண பரத சத்ருக்கனர் பிறந்தனர்.

இவ்வுதாரணங்களைச் சற்றுக் கவனித்துப் பாருங்கள். இரவுபகல், என்பது இரவும் பகலும் என்று விரியும். அப்படியே, கத்தியும் கேடகமும் என்றும், தாயும் தந்தையும் என்றும், இரண்டும் காலும் என்றும், இராமனும் லக்ஷ்மணனும் பரதனும் சத்ருக்கனனும் என்றும் விரிந்து, ஒன்றோடு ஒன்று சேர்த்துக் கணக்கு எண்ணவேண்டிய பொருளில் அவை தொடர்வது தெரியவரும். இப்படி எண்ணுவதற்கு உதவியாக வருகின்ற உம் என்னும் இடைச் சொல்லை, எண்ணும்மை என்பர். அவ்வெண்ணும்மை மறைந்து நிற்கச் சொற்கள் தொடருமாயின் அத்தொகை உம்மைத் தொகை.

---

# ஞான தீபம்

[415-வது பக்கத் தொடர்ச்சி]

ஜீவராசிகள் எல்லாம் ஜகதீசனது அம்சங்களே ஆவன; பிரபஞ்சம் ஜகச்சக்தியின் தகிலாகும்; இஜ்ஜகத் சக்தியின் உருவத்தையும் குணத்தையும் உலகமாகிய தகில்உணர்த்துகின்றது; அத் தகில்மூலமாகத்தான் அஜ் ஜகத்சக்தியை ஒருவாறு கிரஹிக்க இயலும்.

“என்றும் எந் நிமித்தமும் மாறாத் தெய்விக நீதிக்கும் பிரபஞ்சப் போக்குமுறைமைகளுக்குங்கீழ்ப்படிதலும், மனிதன் பரமான்மாவின் அம்சமுடையஅடிமையாக விளங்குதலும், உலகநீதி அல்லது இயற்கை விதிகளை அனுபவவேதும் எதிர்த்துப்போகச் சக்தியற்றிருத்தலும், மெய்விஷயங்களா யிருக்க, “சுதர்

திரம் இன்றியமையாத பெரும்பேறு; மனிதன் சுதந்தரி" என்று கழறுவதன் விவேக மென்னையோ?" எனச் சிலர் வினவி ஆக்ஷேபிக்கலாம். உண்மையாதெனின், பொம்மைகள்போல் ஆட்டப்படுதற்கும், மற்று, காரண காரியங்களின் நுட்பத்தையும், பலன் பிரதிபலன்களின் நுட்பத்தையும் ஓர்ந்துணர்ந்து, சர்வமும் ஓரே நன்மையை நாடி இயங்குவன என்பதையும், அகண்ட நிரந்தர நிர்விகார நன்மையின் ஸ்தாபனத்தின் பொருட்டு யாவும் இயக்கப்படுகின்றன வென்பதையும் தெளிந்து, ஜகத்பிதாவின் அம்சமான ஜீவான்மா தன் பிதாவினால் ஆக்ஞாபிக்கப்பட்டுள்ள இயக்கங்களையும் முறைகளையும் முறைமையையும் ஒப்பி உள்ளம் உவந்து தொடர்வதற்கும் வித்தியாசமில்லையோ? விசால நோக்கத்தாலும், பலதிறக் கலைப் பயிற்சியாலும், பரந்த அநுபவத்தாலும் பிரபஞ்சாதிகளின் சீரையும் ஒற்றுமையையும் மெய்ந்நோக்கத்தையும் அறிந்து, சத்கருமங்களி லீடுபட்டு மனஞ்சலிக்காமல் உழைத்தலே சுயநிர்ணயமாம். ஆன்மஞானம் கைவல்லியம் (Self determination, self realisation) என்னப்படுவது இதுவே; இதுவே சுதந்தரத்தின் உட்பொருளாகும்.

உணர்ச்சிகளின் தொகுதியே (togetherness of feelings), அல்லது, மனோ வேறுபாடுகளின் நிலையே (states of mind) ஆன்மா என்பது; புலன்கள் அழிய, உணர்ச்சிகளும் அழியும்; உணர்ச்சிகள் அழிய மனப் பிரவிர்த்திகளும் அடங்கிவிடும்; மனோவிர்த்திகள் அடங்கவே ஆன்மா என்பதும் ஒடுங்கிப்போம்." என்னல் நேரியதாமோ. மனோவேறுபாடுகளின் நிலைமைகளைச் சார்ந்துள்ள உணர்ச்சிகளின் தொகுதியைப் பற்றிய அறிவே (feeling of togetherness) அகத்தின் இயக்கம் ஆகும், ஆன்மாவின் செயலாகும். முன்னும் பின்னும் ஒத்திட்டுப்பார்த்து மெய்யாக ஓர் விஷயத்தை நிர்ணயித்தலும், விஷய நிகழ்ச்சிகளின் தாரதம்மியங்களைச் சீர் தூக்கிப்பார்த்து முடித்தலும் ஆன்மாவிற்குரிய குணாதிசயங்களாகும். "ஒருவனுடைய மனதின் இயக்கமும் நிலையும் அவனுடைய தேக அமைப்பையும் இயக்கத்தையும் ஸ்திதியையும் பொருத்துள்ளன: அதாவது ஒருவனுடைய சிந்தனை சொல் செயல்களெல்லாம் சரீர உறுப்புக்களின் இயக்கங்களால் அடக்கி யாளப்படுவனபோலும்; உடலைத் தன் எண்ணப்படி நடத்துதற்கான சுயசக்தி வாய்ந்ததன்று மனம்." என்னலாகாது. ஒன்றிற்கு மற்றது ஆதாரமும் பக்கபலமும் தூண்டுகோலும் ஆனாலும், ஒன்றையொன்று பற்றிக் கிரியைகள் புரிவதேபோலத் தோன்றினும், மனமே உயர்ந்து சிறப்புற்று விளங்குவது; தேகம் மாத்திரம் தானாக எதையும் செய்யவல்லதன்று; மனத்தினாற்றான் தேகமானது நல்வழியிற் செலுத்தப்பட்டு உழைக்கின்றது.

மூடபக்தியால் பின்னப்பட்ட பகட்டுப் போர்வையை உதறிக் களைந்து, சிந்தனை சொல் செயல்களைத் தூய்மையும் நேர்மையும் ஆக்கி, உலக உலகாதிகளின் போக்கையும் தன்மையையும் பலனையும் ஐயந் திரியறத் தெளிதலே மாந்தர் படுகின்ற அல்லல்களுக்கெல்லாம் சிறந்த ஔஷதமாகும்.

[illegible]

விஷயங்களையும் நிகழ்ச்சிகளின் முறைமைகளையும் அறிகிறோம்; ஆனால், விதி என்பதின் பொருள் என்னையோ எனின், துர்ப்பலமும் மனக் களங்கமுமே விதி எனப்படுவது.

அறியாமையும் மிடியும் நிரம்பியது இவ்வுலகவாழ்க்கை; ஆதலால், ஒவ்வொருவனும் தன்னால் இயன்ற வரையிலும் அவைகளைக் குறைப்பதற்கு முயற்சி செய்தலே ஒவ்வொருவனுடைய முழுமுதற் கடமையாகும்.

வருபவைகளை முன்னறிந்து எச்சரித்து மாந்தரை நல்வழியி னிறுத்துபவனே ஞானியாவான்.

சரீரம் ஓர் இயந்திரம் போன்றதாயிருத்தலாற்றான் கல்வி சாத்தியமாகின்றது. நல்ல பழக்கவழக்கங்களையும், மிக்க மேலான எண்ணங்களையும், சுயமாக ஆரத்தீர விசாரித்தறியும் சக்தியையும் ஊட்டிப் பெருக்குகின்ற கல்வியே நற்கல்வி; இதுதான் கல்வியின் உள்ளக் கருத்தாகும். முதலில் கடினமாகத்தோன்றியவை விடாமுயற்சியின்காரணத்தால் சுலபமானவைகளாக் மாறும். தளராவூக்கத்தினாலும் சலிவுறாச் சிரத்தையினாலும், சதாகாலமும் சீரிய எண்ணங்களில் தோய்ந்து நற்செயல்களி லீடுபட்டு உழைத்தலினாலுந்தான் மானுட இயற்கையாகத் தோன்றுகின்ற எல்லா ஆசாபாசங்களும் குற்றங்குறைகளும் வெல்லப்படும்; அகப்புறப் பற்றுக்கள் குறையவே, உதாரநோக்கமும் சமபாவனையும் சுதந்திர உணர்ச்சியும் பரோபகார சிந்தனையும் அபிவிர்த்தியாகும்.

எல்லாவற்றையும் அரித்து அழிக்கும் காலமானது உண்மையை அணுகுதற்கியலாதது.

அப்பிராகிருத சக்தி (genius) என்பது வெடிமருந்தை ஒத்ததாகும். அச்சக்தி மெய்ஞ்ஞானத்தால் ஒழுங்குடன் உபயோகிக்கப்படாவிடில், நாலா பக்கங்களிலும் வெடித்துப் பரவி யாவற்றையும் எரித்துத் துகளாக்கும்.

அயலார்களுடைய சுபிக்ஷம்இன்பம் மாண்புகளை எவ்விதத்திலாயினும் பாதித்துச் சிறிதும் சீர்கெடச் செய்யாமல், ஒவ்வொருவருடைய மேல் வளர்ச்சியையும் பெருமையையும் சுவபாவத்தையும் உறுதிப்படுத்தும் சக்தியே நன்மை எனப்படுவது.

மாந்தரனைவரும் சுதந்திரமும் சமத்வமும் பெற்றிருந்ததாகவோ, அல்லது பெற்று இரமிக்கப்போவதாகவோ நம்பச்செய்யும் சாதனைகள் பொய்யுடையதும் தீமையை விளைவிக்கக்கூடியதும் அபாயம் நிரம்பியதும் ஆன சாதனைகளாம்.

குடும்பம் சங்கம் இராஜாங்கம் அனைய எதனிலும் ஏகத்வம் (சுயநலசிந்தை) பெருந் தீமைகளை விளைக்கவல்லது.

ஜடம் ஜீவன், சத் அசத், என்பன ஓரே வஸ்துவின் இரு பெயர்கள் போலும்.

வறுமை பிணி பசிகளாற் பீடிக்கப்பட்டு வருந்துபவர்களிடம் மூர்க்கத்வமும் இழிவும் செழித்து வளர்வது இயன்றதாகின்றது.

வாணாளின் ஆதர்சம் யாதெனில் நற்கருமங்களை மேற்கொண்டு உழைத்தலேயாம். இதற்குச் சகாயமாயிருக்கும் கல்வியும் ஞானமுமே சிறந்தன. நூற்றுக்கணக்கான புத்தகப்படிப்பும், வருடக்கணக்கான [illegible] மாத்திரம் வீணானவை.



புத்தி வளப்பம் நுண்ணறிவு முதலியவைகளுடன் உள்ளத் தூய்மையும் கனிவும் அவசியமானவை.

ஒவ்வொருவனும் அவ்வவன் விரும்பியதை எளிதில் பெற்றுவிடுவானாயினும், அல்லது ஒருவனது உடைமைகளை மற்றொருவன் அபகரிப்பதே இல்லையாயினும், அல்லது அபகரித்தற்குரிய சந்தர்ப்பம் நேர்வதில்லையாயினும், அல்லது மற்றவர்களைத் துன்புறுத்தித் துடிக்கச்செய்யும் விஷயங்களையும் சாதனங்களையும் ஒருவரேனும் அவாவி ஏற்றுப் பாடுபடுவதில்லையாயினும் நீதிஎன்றதற்கு இடமேயிராது போலும்.

சங்கத்தின் முன்னேற்றத்திற்கு அநுகூலிப்பவர்கள் அதன்கீழ் அகப்பட்டுச் சிதைந்து மடிகிறார்கள்!

சுகபோகங்கள் நாளடைவில் அயர்ச்சியையும் வெறுப்பையும் விளைக்கும்.

ஒவ்வொருவனும் அவ்வவனுடைய முக்கிய குணாதிசயத்தையும் திறமையையும் தெளிவாக அறிந்து, அவைகளைத் தக்கவழிகளிற் செலுத்தி உழைப்பானால், உலகில், ஐக்கியமும் ஒழுங்கும் பரஸ்பர அன்பும் விசுவாசமும் ஆனந்தமும் பெருகிப் பரவும்.

சத் சித் சிவம் என்பவைகளைப் பற்றிய சித்தாந்தங்களுக்கும் உலகாதிகளின் அமைப்பு போக்கு முதலியவைகளுக்கும் உள்ளேயுள்ள பரஸ்பர ஒவ்வாமை துக்கித்தற்குரிய பெரு விஷயமாயினும், அவ்விரண்டிற்கு மிடையுள்ள அகழியின் அகலத்தையும் ஆழத்தையும் சிறுக்கிக் குறைத்தற்கான முறை யாதெனில், ஒவ்வொருவரும் அவ்வவர் மனப்பாங்கை ஓர்ந்தறிந்து, சிற்பியானவன் தான் எண்ணிய உருவம் தோன்றும் வரையிலும் சிலையை அடித்துச் செதுக்கித் திருத்திச் சீர்ப்படுத்தல்போல், சதாகாலமும் சற்காரியங்களிலீடுபட்டு, தான் கைக்கொண்ட கருமம் தன்னால் முடிக்கப்படாவிடினும், மற்றவர்களால் எடுத்துத் தொடர்ந்து முடிக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் உழைத்தலேயாம்.

வாழ்க்கை ஓர் பெரிய நன்கொடையாகும். நாணயமற்ற காசாக அதனைமாற்றக்கூடாது. வாழ்க்கை ஓர் உயர்ந்த உலோகம் போன்றது. அக அறிவு என்ற அக்கினியில் அதனைப் பன்முறை சுட்டுத் தூயதாக்கவேண்டும். மறைக்கவும் அவித்தற்கும் முடியாத தீபஸ்தம்பம்போல், ஒவ்வொரு ஜீவான்மாவும் நின்று பிரகாசிக்க வேண்டும். ஒவ்வொருவரும் அவதிப்படுகையில், அதனின்று மனச்சாந்தியும் இன்பமும்பெற்று உய்ந்தெழுந்த நக்ஷத்திரம்போல் திகழவேண்டும்.

சர்வ சக்தியும் சர்வ நன்மையும் ததும்பப்பெற்ற பராசக்தியால் நிரம்பப்பெற்றது இவ்வுலகம்; ஒவ்வொரு ஜீவான்மாவும் பூசாரி போன்றதாகும்; ஒவ்வொரு தொழிலும், அல்லது கைங்கரியமும் ஒவ்வோர் விதத்தில் சிறப்புற்று விளங்குதற்குரியது. நன்மையே வியாபித்து நிலைத்திருக்கும்பொருட்டு உழைக்க வேண்டும்; அறிவும் சக்தியும் புகழும் எவ்வளவு விருத்தியாகின்றனவோ, அதே அளவுடன் கடமையை ஆற்றவேண்டுமென்ற உணர்ச்சியும் பெருகுகின்றது.

காரியங்களின் வெற்றிக்கும், சிந்தனை செயல்களாக வெளியாதற்கும், இடையூறு இடுக்கண்களை வெல்லுதற்கும் நம்பிக்கையும் விசுவாசமும் இன்றியமையாதன. பக்தியும் தைரியமும் வாய்மையுமே அமரத்தன்மை எய்துதற்கு உதவுவன.

உலகில் நித்திய வஸ்துக்கள் யாவையெனின், அஞ்சாநெஞ்சமும் தியாகசிந்தனையுமே யாம். நன்மையை நாடி இயற்றப்படும் தொழில்களும் செய்கைகளும் ஒரு பொழுதும் வீண்போகா: நல்லெண்ணங்களும் ஹிதோபதேசங்களும் பாறையில் விதைக்கப்பட்ட விதைகள்போல் ஒழிவதில்லை.

இருண்ட ஆகாயத்தில் பிரகாசிக்கும் நக்ஷத்திரங்கள் போன்றவர் வரப்பிரசாதிகள்; இவர்களே ஒவ்வோர் காலத்தின் ஆதாரமும் துணைக்கருவியும், சங்கங்களின் உயிரும் அச்சாணியு மாவார்.

இன்னல்இடர் ஜயம் தோல்விகள் மூலமாகத்தான் மேலெழக்கூடும்.

மௌட்டியம் மானுடக் குணாதிசயமன்று. மௌட்டியன்என அறிந்து அம்மௌட்டியத்தை முறித்து அறிஞனாகவேண்டுமென்றவிருப்பமே ஞானக்களஞ்சியத்துட் செலுத்தும் முதற்படியாகும்.

ஏகாக்ரசித்தம், அல்லது ஒருமுக நோக்கந்தான் வெற்றிக்கு அடிகோலுவது.

ஒவ்வொருவரிடமுமுள்ள தெய்விகப் பொக்கிஷத்தின் இருப்பையும் மேன்மையையும் அறிவுறுத்துவது குருவின் கடனாகும்; அதை நல் லப்பியாசங்களாலும், சுயமுயற்சியாலும், சுயவிசாரிப்பினாலும் உணர்ந்தறிந்து ஆனந்தித்தலே சீடனது கடமை.

மதம் என்பது ஓர் வெறுஞ் சாஸ்திரம் அன்று. கோயில் ஓர் தர்க்கசாலை யன்று. மற்று, நிரந்தர நித்திய சக்தியைப் பூரணமாக உணர்த்துவனவாம்.

புஜபலமும் அன்பு அல்லது இனிமையும் ஒன்றையொன்று பற்றிச் சீருடன் வளராவிடில், இனிமைக்குணம் இழிந்து பலனற்றதாகும், தேகபலம் குரூரத்வமாக முடியும். சமாதானம் மாத்திரம் இறப்பை ஒத்துளது; அமைதியைக் குலைக்கும் போர் மாத்திரம் பேய்த்தொழிலை யொத்ததாகும்.

(தொடரும்)

## நம்மாழ்வார் வைபவம்

### திருவாய்மொழி

[404-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பத்து, 2-ம் தசகம்.

1-ம் பாசுரம்

பொலிக பொலிக பொலிக
போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமு நைந்த
நமனுக்குங் கியாதொன்று மில்லை
கலியும் கெடுங்கண்டு கொண்மின்
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்திசை பாடி
யாடி யுழிதரக் கண்டோம்.

அவதாரிகை:—ஆழ்வார் தாம் "ஒன்றும் தேவும்" என்னும் தசகத்தில் செய்த உபதேசத்தால் உலகத்தவர்களில் பலர் திருந்தி வைஷ்ணவர்களானதைக் கண்டு சந்தோஷித்து அவர்களுக்குப் பல்லாண்டுபாடி

கிறார். மற்றவர்களுக்கும் 5,6 பாசுரங்களில் "தொண்டீர், சிந்தையைச் செந்நிறுத்திப் பக்தர்கள் கூடப் போய்ப் பகவானையே தொழுதுய்மின்" என்று கற்பிக்கின்றார்.

உரை:—வல்-வலிய, உயிர்ச்சாபம்-ஆத்மாக்களின் பாவங்கள், போயிற்று - நசித்துப் போயின-(பாவங்கள் பலித்துக் கேட்டுக்கு ஹேதுவாகு முன்னரே ஆத்மாக்கள் பகவானை ஆச்ரயிக்கத் துடங்கிவிட்டன. தண்ணீர் விடாத நெல்லைப்போல் பாபங்கள் அங்குரிக்கவில்லை யாகையால் வசன ரூபமான சாபம் போல் ஆயின என்று தாத்பரியம். நலியும்-துயர்செய்கின்ற, நரகும் - நரகங்களும், நைந்த - சூனியங்களாயின. புதிது புதிதாய்ப் பாவிகள் இனி நரகம் சென்று குடியேறவில்லை. நமனுக்கும்-இவற்றிற்கு எஜமானுன யமனுக்கும், இங்கு யாதொன்றுமில்லை - செய்யக்கடவவேலை ஒன்று மிவ்வுலகத்திலில்லை, கலியும் கெடும்-கலியுகத் தீச் செயல்கள் இயற்றுவார் இனி இல்லை, கடல் வண்ணன் - குளிர்ச்சியான தயாபுருஷனை பகவானது, பூதங்கள் - பக்தர்கள், மண்மேல் - உலகத்தில், மலியப் புகுந்து-வெகுபேர்களாகி, இசை பாடி - உற்சாகத்தால் கானங்கள் செய்து, ஆடி - உலகத்தோர் வைஷ்ணவர்களானார்களே என்று நர்த்தனம் செய்து, உழிதரக் கண்டோம் - எங்கும் வியாபிக்கக் கண்டோம். பொலிக, பொலிக பொலிக-உலகில் இப்படி ஸ்ரீ வர்த்திக்க வேண்டும். இனிமேலும் இவ்வண்ணம் வளரவேணும்.

---

2-ம் பாசுரம்

கண்டோம் கண்டோம் கண்டோம்
கண்ணுக் கினியன கண்டோம்
தொண்டீ ரெல்லீரும் வாரீர்
தொழுது தொழுதுநின் றார்த்தும்
வண்டார் தண்ணந் துழாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்டான் பாடி நின்றாடிப்
பரந்து திரிகின் றனவே.

பதக்குறிப்புக்கள்:—தொழுது தொழுது நின்றார்த்தும்-நாமெல்லாம் வைஷ்ணவர்களாய்க் கூடிய கோஷ்டியில் ஸேவித்து அவர்களைப் போலவே சந்தோஷத்தால் உல்லாச கோஷங்களைச் செய்வோம், தொண்டீர் வாருங்கோள் என்று அழைக்கின்றார். பண்தான் பாடி-வைஷ்ணவ பக்தர்கள் பாடும் பாட்டுக்களைப் பாடி, நின்று ஆடி-ஸ்திரகான யுக்தர்களாக ஆடி, பரந்து-பூமியில் கால் பாவாமல் எழும்பி எழும்பி, திரிகின்றனவே - பக்தர்கள் யதேச்சையாய்ச் சந்தோஷப்படுகிறார்கள். இதைவிட நல்ல காட்சி காணப்போகிறோமோ?

---

3-ம் பாசுரம்

திரியும் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து
பெரிய கிதயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருகக்
கரிய முகில்வண்ண னெம்மான் கடல்வண்ணன்
[பூதங்கள் மண்மேல்
இரியப்புகுந்திசைபாடி யெங்குமிடங்கொண்டனவே

பதக்குறிப்புக்கள்:—இரியப் புகுந்து-கோலாஹலம் பிறக்கும்படி புகுந்து, எங்கும் இடம் கொண்டன - பகவானது பக்தர்கள் எங்கேயும் பரவிவிட்டார்கள். இசை பாடுகிறார்கள். பேரின்ப வெள்ளம் பெருக-எங்கும் உலகத்தார் பகவானைப் பாடியாடி இன்பத்தில் மூழ்கப் பக்தர்கள் நிறைந்தனர். ஆகையால், திரியும்-இப்பொழுது திரிகின்ற, கலியுகம், நீங்கி-மாறி, தேவர்கள் தாம் புகுந்த-இவ்வுலகத்திலேயே தேவதைகளும் கூடவந்து பக்தர்களோடு கலந்து பூஜிப்பதால், கிதயுகம்-கிருதயுகம் - கலிக்குமுன்னுன சாதுஜனங்களுக்கு இஷ்டமான கிருதயுகமே, பற்றி-திரும்பி வந்துவிட்டது போல் எங்கும் பகவத்பக்தியும் உல்லாஸங்களும் காண்கின்றன. ஆகையால் நாமும் கூட, தொண்டீர்களே வைஷ்ணவ பக்தர்களாகி உற்சாகத்தால் அவர்களைத் தொழுது சேர்வோம்என்று முன் பாட்டில் சொன்னதைக் கூட்டி அந்வயிக்கவேண்டும்.

---

4ம்- பாசுரம்

இடங்கொள் சமயத்தை யெல்லாம்
எடுத்துக் களைவன போலே
தடங்கடற் பள்ளிப் பெருமான்
தன்னுடைப் பூதங்க ளேயாய்க்
கிடந்து மிருந்து மெழுந்தும்
கீதம் பலபல பாடி
நடந்தும் பரந்தும் குனித்தும்
நாடகம் செய்கின் றனவே.

பொழிப்புரை:—உலகம்முழுவதும் வியாபித்து ஜநங்கள் தங்களை ஆச்ரயிக்கும்படி செய்கிற பல வேத விரோதிகளான சமயங்களை யெல்லாம் எடுத்துக்களைவதுபோலவே, ஜகத்தெல்லாம், க்ஷீராப்தியில் பள்ளி கொள்ளும் பகவானது பூதங்களேயாய்ப் பரம புருஷ நிரதிசய கல்யாண குணங்களின் குணமிர்த பானத்தாலே அறிவழிந்து இருந்தும் எழுந்தும் கிளம்பியும் பாடியும் ஆடியும் இவ்விதக் குதூஹல சேஷ்டிதங்களைச் செய்யாநின்றார்கள். இவர்களைத் தொழுது தொழுது நின்று ஆரவாரம் செய்வோம், தொண்டீர்களே வாருங்கோள்.

---

5-ம் பாசுரம்

செய்கின்ற தென்கண்ணுக் கொன்றே
யொக்கின்ற திவ்வுல கத்து
வைகுந்தன் பூதங்க ளேயாய்
மாயத்தி னெங்கு மன்னி
ஐயமொன் றில்லை யரக்கர்
அசுரர் பிறந்தீ ருள்ளீரேல்
உய்யும் வகையில்லை தொண்டீர்
ஊழி பேர்த்திடும் கொன்றே

பதாந்வயமும் உரையும்:—இவ்வுலகத்து வைகுந்தன் மதங்களேயாய் மாயத்தினால் எங்கும் மன்னி - இந்த உலகில் வைகுண்ட நாதன் பக்தர்களாய் எங்கும் அவரே காணும்படி ஆச்சரிய சக்தியினால் நிரம்பி, செய்கின்றது என் கண்ணுக்கு ஒன்றே ஒக்கின்றது- என் காட்சிக்குத் தெரிகிற வரையில் ஒரே ஒருகாரியந் தான் செய்கின்றதாகப் புலப்படுகிறது. தொண்டீர்-சமயங்களில் ஆசைப்பட்டு இதர தேவதைகளை ஆச்ரயிக்கும் மனிதர்களே, நீங்கள் "அரக்கராயும் அசுரராயும் (இவ்வுலகத்தில்) பிறந்துள்ளீரேல்-ராஜஸ தாமஸ குணங்களின் மிகுதியால் அப்படிநீங்கள் அவைஷ்ணவ சமயத்தில் பிறந்து அதனையே அனுஷ்டிக்க ஆசைப்பட்டால் அது பலிக்காது, ஊழி பேர்த்திடும் [illegible] சமர்த்தியால் கலியுகமே முன்



சென்ற கிருதயுகமாகிவிடும், கொன்றே - நீங்கள் உங்களுடைய புறமதத்தைக் கடைபிடித்தாலும் உங்கள் மதம் கெடும், நீங்களும் இறந்துபடுவீர்கள். உய்யும் வகை இல்லை - உங்கள் மதத்திலேயே நின்று உய்ய வழி இல்லை. ஐயம் ஒன்றில்லை - இப்படி யாம் செய்துள்ள முடிவில் ஒருவித சந்தேகமுமில்லை - இது நிச்சயம் என்கிறார்.

விசேஷக் குறிப்பு:—அடுத்த பாசுரத்தில், இதரசமயத்தாரிற் சத்துவகுணம் மேலிட்டவர் சிலர் இருந்தால் அவர்களுக்குப் பிழைக்க நல்வழி காட்டுகிறார்.

---

6-ம் பாசுரம்

கொன்றுயி ருண்ணும் விசாதி
பகைபசி தீயன வெல்லாம்
நின்றிவ் வுலகிற் கடிவான்
நேமிப் பிரான்தமர் போந்தார்
நன்றிசை பாடியும் துள்ளி
ஆடியும் ஞாலம் பரந்தார்
சென்றுதொழு துய்மின் தொண்டீர்
சிந்தையைச் செந்நி றுத்தியே.

பொழிப்புரை:—நேமிப் பிரான் - சக்கரத்தாழ்வார். இவரைச் சொன்னது-மஹாவிஷ்ணுவின், 'சங்கு சாரங்கம் கதை கட்கம் முதலான ஆயுதங்களின் மூர்த்திமான்களை இலக்ஷிக்கிறது. இவர்கள் ஸ்ரீவைஷ்ணவ இதர பரிவாரங்களுடன், இந்த உலகில் மனிதரைக் கொன்று தின்னும், வியாதி பசி பகை முதலிய தீயன வெல்லாவற்றையும் துரத்திவிட்டு வைஷ்ணவரைப் பாதுகாக்கும்பொருட்டு நிரம்பி வந்திருக்கிறார்கள். இவர்கள், எண் திசையும் பகவத்குணாநுபத்தில் ஈடுபட்டுப் பாடியும் ஆடியும் உலகமெங்கும் திரிகின்றார்கள். மற்றத் தெய்வத்தில் ஆசை வைத்த மனிதர்களே, மேற்சொன்ன வைணவ கோஷ்டியில் சேர்ந்து மனதைச் செவ்வையாக நிறுத்தி அவர்கள் தொழும் எம்பெருமானையே தொழுது பிழையுங்கோள்; இதுவே உங்களில் சாத்வீகர்களுக்கு உய்யும் வழி.

---

# காற்று மழை

## Shakespeare—"The Tempest"

[408-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 2. களம் 1.

இடம்:—தீவின் மற்றோர்புறம்.

அலான்ஸோ:—நேப்ல்ஸ் தேசத்து அரசன்.
ஸபஸ்ட்டியன்:—அவன் தம்பி.
அன்டோனியோ:—ப்ராஸ்பபீரோவின் தம்பி.
கன்ஸாலோ:—அலான்ஸோவைச் சேர்ந்த வோர் பிரபு; அன்டோனியோவின் வஞ்சனையால், ப்ராஸ்ப்பீரோவையும் மிராண்டாவையும் முன் ஓர் படகில் சேர்த்துக் கடலில் விட்டபோது, அவர்களிடம் இரக்கங்கொண்டு உணவும் உடையும், ப்ராஸ்ப்பீரோவின் புத்தகங்களையும் அப்படகில் வைத்தவன் இவன்தான்.
ஏட்ரியன்; ப்ரான்ஸிஸ்க்கோ:—இவ்விருவர்களும், அலோன்ஸோவைச் சேர்ந்த பிரபுக்கள்.

---

கன்ஸாலோ:—ஐயனே, வேண்டிக்கொள்கின்றேன், மகிழ்வுற்றிரு நீ. உனக்கும், எங்களனைவர்க்கும், உவகைகொள்ளக் காரணம் உளது. ஏனெனில், நாம் தப்பிப்பிழைத்த இது, நம்முடைய நஷ்டத்தையெல்லாம் நெடுந்தூரம் கடந்து நிற்கின்றது (1). நம் துயரத்தின்குறிப்போ மிகச் சாதாரணமானது; ஒவ்வொரு நாளும், யாரேனு மோர் மாலுமியின் மனைவியோ, யாதேனுமோர் வணிகக்கப்பலின் தலைவரோ, வணிகனோ, இன்னோர்நம்முடைய துயரத்தின் விடயத்தையேஉடையவராகின்றார்(2) மற்று, இவ்வற்புதமோ—நாம் காப்பாற்றப் பெற்றதைச் சொல்கின்றேன்—நம்மைப்போல் பேசக் கூடியவர் பத்துநூறாயிரத்திலொருவரேனும்இருத்தலருமை 3). எனின், நல்லோய், என் ஐயனே, உன் அறிவுகொண்டு, நமது துக்கத்தை நம் சுகத்தினோடு நிறுத்துப் பார் (4)

அலான்ஸோ:—போதும், சற்றே சும்மா விரு.

ஸபஸ்ட்டியன்:—ஆற்றுமொழிகளை இவன் ஆறிய கஞ்சிபோல் ஏற்றுக்கொள்கின்றனன். (5)

அன்டோனியோ:— துக்கம் வினவைத்திருப்பவன் ஒருவன் இவனை இப்படிக் கைவிடமாட்டான் (6)

குறிப்பு:—இக்களத்தில் நடைபெறும் சம்பாஷணையின் பொருளும் போக்கும் விளங்கவேண்டுமாயின், ஒரு முறைக்குப் பன்முறை ஊன்றிப்படித்து உணர்ந்துகொள்ளல் அவசியம்.

கன்ஸாலோ அரசனது துயரத்தை ஆற்றுவதற்குச் சிற்சில சொல்ல முயல்கின்றான். எட்ரியனும் ப்ரான்ஸிஸ்கோவும் அவனது பேச்சைச் சார்ந்து இரண்டொரு வார்த்தைகள் இடையிடையே சொல்கின்றனர். இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் இடத்தைவிட்டு, ஸபஸ்ட்டியனும் அன்டோனியோவும் சற்றே விலகி நின்று, கன்ஸாலோபேசுவதற்கு எதிரெதிர், தம்முள்ளே தாழ்ந்த குரலில் பரிகசித்துக்கொண்டிருக்கின்றனர். ஆதலால், இந்தக்களத்தில் எல்லாரும் கூடிக் கலந்து பேசுகின்றார் களெனக்கொள்ளலாகாது. ஆலான்ஸோவும் கன்ஸோலாவும், எட்ரியனும், ப்ரான்ஸிஸ்கோவும்ஒருபுறமும், அவர்கள் பேசுவதைப் பரிகசிக்கின்றவர்களாய் ஸபஸ்ட்டியனும் அன்டோனியாவும் மறுபுறமும் பிரிந்து நிற்கின்றனர்.

(1) நாம் தப்பிப்பிழைத்தோமே என்பதை நினைக்குங்கால், பர்டினண்டை இழந்ததையும் பொருட்படுத்தாமல் மகிழவேண்டியவர்களா யிருக்கின்றோம்.

(2) கப்பல் உடைவதும், அதனால் உயிரும் பொருளும் இழப்பதும், அதுபற்றிச் சிலர் வருந்துவதும் நாடோறும் நிகழ்கின்ற செய்தியாயிருப்பதால், நமக்கிது நேர்ந்தது புதுமை யன்று; ஆதலின் வருந்தவேண்டா—என்பது பொருள்.

(3) கப்பல் உடைந்து இறப்பது சகஜம், தப்புவது அற்புதமான அருமை. உடைந்த கப்பலிலிருந்து தப்பிப்பிழைத்து நம்மைப்போல் பேசிக்கொண்டிருக்கிற பாக்கியம் பத்து இலக்ஷம்பேரில் ஒருவருக்குக்கூடக் கிடைக்காது. ஆகையால் இதனை நினைத்து மகிழ்ந்திரு—என்பது பொருள்.

(4) சுகமே அதிகமாதலின் வருந்தவேண்டா—என்பது பொருள்.

(5) ஆறிய கஞ்சியை வெறுப்பதுபோல், அலான்ஸோ, கன்ஸாலோ கூறும் ஆறுதல் மொழிகளை வெறுக்கின்றான்—என்பது பொருள்.

(6) 'சும்மாவிரு' என்று அலான்ஸோ தடுத்தவுடன், கன்ஸாலோ மேலொன்றும் பேசாமல் இருந்துவிடவே, அன்டோனியோ அதனைக் குறித்துச் சொன்னது இது. துக்கப்பட்டிருப்பவர்களது துயரத்தை வினவி ஆறுதல் கூற வந்திருப்பவர்கள், இனிச் சொல்லிப் பயனில்லை என்று இவ்வளவு விரைவில் கன்ஸாலோவைப்போல் சும்மா இருந்துவிட மாட்டார்கள்—என்கின்றான்.

(7) இல்லை, இல்லை, கன்ஸாலோ சும்மாவிருந்துவிடவில்லை. இன்னும் என்ன சொல்லலாம் என்றே

**ஸபஸ்ட்டியன்:**—பார், தன் புத்தியின் கடியாரத்திற்குச் சாவி கொடுத்துக்கொண்டிருக்கின்றான். சற்று நேரத்திற்குள் அடிக்கும். (7)

**கன்ஸாலோ:**—ஐயனே—(8)

**ஸபஸ்ட்டியன்:**—ஒன்று, எண்ணு. (9)

**கன்ஸாலோ:**— எய்திய துயரையெல்லாம் ஏற்றுக் கொள்வதாயின், ஏற்போனுக்கு வருவது—(10).

**ஸபஸ்ட்டியன்:**—ஒரு காசு. (11).

**கன்ஸாலோ:**—காசுதான் வரும், இது வாய்மையே. நீ எண்ணியதனினும் உண்மையா யுரைத்துவிட்டாய்.

**ஸபஸ்ட்டியன்:**—நீ கொள்ளவேண்டுமென யான் கருதியதனினும் அதிக சதுரமாய் அதனை ஏற்றுக் கொண்டனை. (13).

**கன்ஸாலோ:**—ஆதலின், என் தலைவ—

**அன்டோனியோ:**—சீ! தன் நாவினை இவன் எவ்வளவு வீண்செலவு செய்கின்றான்!

**அலான்ஸோ:**— வேண்டிக்கொள்கின்றேன், விட்டுவிடு (14).

**கன்ஸாலோ:**—நல்லது, முடித்துவிட்டேன் : எனினும்—

**ஸபஸ்ட்டியன்:**—இவன் பேசியவண்ணமாய்த்தான் இருப்பான்.

**அன்டோனியோ:**— இவ ரிருவரில் யார், இவனோ எட்ரியனோ, பந்தயம் வைப்போம், முதலில் கூவத் துவக்குவார்?

**ஸபஸ்ட்டியன்:**—கிழக்கோழி.

**அன்டோனியோ:**—இல்லை, கோழிக்குஞ்சு.

**ஸபஸ்ட்டியன்:**—நன்று, பணயம்?

**அன்டோனியோ:**—ஒரு சிரிப்பு.

**ஸபஸ்ட்டியன்:**—சரி (15)

**எட்ரியன்:** – இத்தீவு பாலைவனமாகத் தோன்றி— –

**ஸபஸ்ட்டியன்:**—ஹ, ஹ, ஹா! செலுத்திவிட்டேன். (16)

**எட்ரியன்:**-வசிக்கத்தகாததாயும், எய்துவதற் கருமையாயும்—

**ஸபஸ்ட்டின்:**—இருந்தபோதிலும்,

**எட்ரியன்:**—இருந்தபோதிலும்—

**அன்டோனியோ:**—அதனை அவன் விடுவதற்கு இயலாது (17)

**எட்ரியன்:**—நுண்ணிய இளகிய மெல்லிய மிதமான பருவத்தினையுடையதா யிருத்தல் வேண்டும் (18).

**அன்டோனியோ:**—மிதமானபருவம் மெல்லியவோர் சிறுக்கியாயிற்று.

**ஸபஸ்ட்டியன்:**—அன்றியும், மிக்க கல்வித்திறமையுடன் இவன் வழங்கியவண்ணம், நுண்ணியளுமாவாள். (19)

**எட்ரியன்:**—காற்றோ இங்கு நம்மீது மிகவும் இனிமையாய் மூச்சுவிடுகின்றது.

**ஸபஸ்ட்டியன்:**—நுரையீரல்கள் இருக்கின்றனவோ இதற்கு, அவைகளும் அழுகினவைகளோ!

**அன்டோனியோ:**—அல்லது சகதியின் நாற்றத்தைப் பூசிக்கொண்டு வருகின்றதுபோலும், (20)

**கன்ஸாலோ:**—உயிரிற்கு அநுகூலமானவைகளெல்லாம் இங்கே உள.

**அன்டோனியோ:**—உண்மையே, வாழும் வழி தவிர.

**ஸபஸ்ட்டியன்:**—அதனைத்தான் காணேம், இல்லையென்றே சொல்லலாம். (21).

யோசித்துக் கொண்டுதானிருக்கின்றான். அவன் புத்தியாகிய கடியாரம் 'ஸ்பரிங்' தளர்ந்திருப்பதால் அடிக்கவில்லை. இதோ அவன் சாவிகொடுத்து முடிந்ததும் அடிக்க ஆரம்பிக்கும் பார்—என்பது பொருள்.

(8) இதற்குள், 'ஐயனே' என்று ஏதோ அலான்ஸோவிற்கு மீண்டும் சொல்ல ஆரம்பிக்கின்றான்.

(9) உடனே, ஸபஸ்ட்டியன் அன்டோனியோவை நோக்கி, "பார், நான் சென்னபடி கடியாரம் அடிக்க ஆரம்பித்துவிட்டது. ஒன்று அடித்தது. இன்னமும் அடிக்கும், கணக்கெண்ணு—என்பது பொருள்.

(10) 'ஐயனே' என்று கன்ஸாலோ ஆரம்பித்த தன் வாசகத்தைத் தொடர்ந்துரைப்பது இது. "எத்தனையோ துயரங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நம்மைத்தேடி வந்துகொண்டே இருக்கும். அவைகளை எல்லாம் நாம் ஏற்றுக்கொள்ளலாமா; அவ்வாறு ஏற்றுக்கொண்டால், கொள்பவனுக்கு வருவது......என்று கான்ஸாலோ வாக்கியத்தை முடிப்பதன்முன், ஸபஸ்ட்டியன் "ஒரு காசு" என்று கூறி முடித்துவைக்கின்றான்.

(11) 'ஏற்போனுக்கு' என்று கன்ஸாலோ கூறிய அந்தச் சொற்களுக்கு ஸபஸ்ட்டியன், "பிச்சையெடுப்பவன்" என்று குறும்பாகப் பொருள்கொண்டு, "ஏற்பவனுக்கு வருவது ஒரு காசு" என்று முடிக்கின்றான்.

(12) இச்சொல் கன்ஸாலோவின் காதில்விழ, உடனே 'காசு' என்பதற்கு, குற்றம் அல்லது தீமை என்ற பொருளைப் பொருத்தி, "ஆம், எய்திய துயரையெல்லாம் ஏற்பவன் தீமையே அடைவான்," எனச் சிலேடைபற்றி ஸபஸ்ட்டியனது பரிகசமும் தன் கருத்திற்கு இணங்கியே அமைதிபெற்றதெனக் காட்டுகின்றான்.

(13) இத்தனைச் சதுரமாய் (சாமர்த்தியமாய்) நீ அதற்குப் பொருள்கொள்ளுவாய் என்று நான் கருதவில்லை—என்பது பொருள்.

(14) நீ யென்னைத் தேற்றமுயல்வது போதும், நிறுத்திவிடு—என்பது பொருள்.

(15) 'முடித்துவிட்டேன்' என்றானேனும் பின்னும், "எனினும்' என்று கன்ஸாலோ கூறினமையால், 'இவன் பேச்சு ஓயமாட்டானே" என்று ஸபஸ்ட்டியன் பரிகசித்தான். கன்ஸாலோ மேலே ஒன்றும் சொல்லவில்லை. இதற்குள், கன்ஸாலோவோ அல்லது எட்ரியனோ முதலில் பேசத்துவக்குவார்கள், என்று அன்டோனியோவும் ஸபஸ்ட்டியனும் பந்தயம் வைக்கின்றனர். கிழக்கோழி போன்ற கன்ஸாலோதான் முதலிற் கூவுவான் என்கின்றான் ஸபஸ்ட்டியன். கோழிக்குஞ்சுபோன்ற எட்ரியன்தான் முதலிற் கூவுவான் என்கின்றான் அன்டோனியோ. தோற்றவர் கொடுக்கவேண்டிய பந்தயப்பொருள் ஒரு சிரிப்பு என முடிவாயிற்று.

(16) எட்ரியன்தான் முதலிற் பேசினானாதலின், ஸபஸ்ட்டியன் தோற்றான். ஆகையால், ஹ ஹ ஹா என்று சிரித்துப்பந்தயத்தையும் செலுத்திவிட்டேன் என்கிறான்.

(17) 'இருந்தபோதிலும்' என்று ஸபஸ்ட்டியன் ஊகித்து உரைத்ததேபோல், எட்ரியனும் தொடர்வதைக் கண்டு, அன்டோனியோ, "இருந்தபோதிலும் என்று வேறேதேனும் சொல்லாமலிருக்க அவனால் எப்படி முடியும்" என்கின்றான்.

(18) எய்துதற்கு அருமையாயும் வசிப்பதற்குத் தகாததாயும் இத்தீவு இருந்தபோதிலும், இதற்குரிய பருவகாலங்கள் விரும்பத்தகுந்தனவாயிருக்கும்-என்று ஏதோ சொல்லி அலான்ஸோவைத் தேற்றமுயல்கின்றான் எட்ரியன்.

(19) இது வம்பிலும் வீண்வம்பு. எட்ரியன் உரைத்த சொற்கள் பருவமங்கையற் குரியனவா யிருத்தலின், 'மிதமான பருவம் மெல்லியவோர் சிறுக்கிஆயிற்று' என்றான் அன்டோனியோ. கற்றோர்கவிற்சியில் இவன் கொடுத்த 'நுண்ணிய' என்னும் அவ்வடைமொழியையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்கின்றான், ஸபஸ்ட்டியன். சிறுக்கி = கண்ணியமற்றபெண்களைக்குறிக்குமோர்கிராமியச்சொல்.

(20) காற்று மூச்சுவிடுகின்றது, என்று எட்ரியன் கூறியதை எடுத்து, "காற்றுக்குச் சுவாசப்பையிருந்தாலன்றோ காற்று மூச்சுவிடுகின்றதென்னலாம்; வருங் காற்றுத் துர்நாற்றமுடன் வீசுகின்றபடியால், அதற்குச் சுவாசப்பையிருந்தால் அது அழுகிக் கிடக்கவேண்டுமென்று எண்ணுகின்றேன்," என்று ஸபஸ்ட்டியன் கூறுகின்றான். அல்லது, இத்தீவில் இருக்கும்சதுப்புநிலங்களின் நாற்றத்தை



**கன்ஸாலோ:**—எவ்வளவு வளப்பமும் செழிப்பும் வாய்ந்ததாய்த் தோன்றுகின்றது இப்புல்! எத்தனை பச்சை!

**அன்டோனியோ:**—உண்மையில். தரையோ மஞ்சள் படர்ந்திருக்கின்றது.

**ஸபஸ்ட்டியன்:**—அதன்கண் பசசையும் உண்டு.

**அன்டோனியோ:**—அதிகம் தவறவில்லை அவன்.

**ஸபஸ்ட்டியன்:**—இல்லை, உண்மையை முழுவதுமே அவன் பிழைத்துவிடுகின்றான். (22).

இக்காற்றுத் தாங்கிவருவது மாகலாம்—என்கின்றான் அன்டோனியோ.

(21) உயிர்போகாமல் வாழ்வதற்கு வழியில்லா இத்தீவில் உயிரிற்கு அநுகூலமானவை உளவென்று உரைப்பதோ—எனப் பரிகசிக்கின்றனர்.

(22) தரையெல்லாம் காய்ந்து மஞ்சள் படர்ந்திருக்க, செழிப்பென்றும் பச்சையென்றும், உண்மையை முழுவதும் மாற்றிப் பேசுகின்றானே கன்ஸாலோ—என்றுஇவர் பரிகசிக்கின்றனர்.

---

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[406-வது பக்கத் தொடர்ச்சி]

### (XI) அப்பரும் சொல்லதிகாரமும்

### (a) திணையும் பாலும்.

பெயர்கள் இருவகையன என்றும், அவை உயர்திணை அஃறிணைப் பெயர்கள் என்றும் முன்னோர் வகுத்த பகுதிகளை விளக்கப்புகுந்த பவணந்தி முனிவர், தொல்காப்பியனார் கூறியவழியே கூறாமல் தான் அவற்றின் இலக்கணத்தைச் சீர்திருத்துவதுபோல்,

"மக்கள் தேவர் நரக ருயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை"

எனத் திணைகளின் சூத்திரத்தைக் கூறினார். தேவர், நரகர், என்னும் பகுதிகள் புராணக்கூற்றால் அறியப்படுவனவன்றி, இயற்கையில் காணப்படுவன அல்ல. மற்றும் தேவதை * என்பது தேவர் பகுதியில் சேர்ந்ததாயினும், அஃறிணைபோல் வழங்குமன்றோ? எனவே, பவணந்தியின் சூத்திரம், இத்திட்பநுட்பங்களைக் கவனியாமல் உண்டாயிற்று என்பதற்கு ஐயுறவில்லை. தொல்காப்பியனார் திணைகளைப் பின்வருமாறு கிளவியாக்கம் முதற்சூத்திரத்தில் வகுக்கின்றார்:—

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
யஃறிணை யென்மனா ரவரல பிறவே
யாயிரு திணையி னிசைக்குமன சொல்லே."

இச்சூத்திரத்தின் மேன்மை, அப்பர் தேவாரமேற்கோள்களால் செவ்வனே விளங்கக்கூடும். மேற்கண்ட சூத்திரத்திற்குச் சேனாவரையர் "மக்கள் என்று கருதப்படும் பொருளை ஆசிரியர் உயர்திணை என்று சொல்லுவர்; மக்களென்று கருதப்படாத பிற பொருளை அஃறிணையென்று சொல்லுவர்" எனப் பொருள் வரைந்தனர். எனவே, அஃறிணைப்பொருளை அதன் செய்கையால் உயர்திணைபோலத் தோன்றவைத்து உரைக்குங்காலை, உயர்திணைப் பால்களைக் காட்டும் வினைகளால் † முடிவுசெய்தல் வேண்டும். பின்வரும் பாசுரத்தில் அம்மரபு காண்க:—

என்றுநா மியாவர்க்கு மிடைவோ மல்லோ
மிருநிலத்தி லெமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் றிருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறைவுடையோ மல்லோ மன்றே
யுறுபிணியார் செறலொழிந்திட் டோடிப்போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிபபுண் ணியத்து ளோமே.

திருமறு மாற்றத் திருத்தாண்டகம் - 5.

இங்குப் பிணியார்என்பது பலர்பால்விகுதியேற்று ஓடிப்போனார் என்னும் பல்லோர் படர்க்கை வினைகொண்டது. பிணி, அப்பருக்கு ஒரு குருமூர்த்தியாய் நின்று சன்மார்க்கநெறியில் செலுத்தியதால், உயர்திணையாயும் பன்மை விகுதிபெற்றும் நின்றதென்றறிக. மற்றும் அச்சூலைப் பிணி பல்வகைப் பகுதியால் ஆண் தன்மையிலும், பெண் தன்மையிலும், ஆளுடைய அரசை வேதித்ததாதலால், அவ்விரண்டு தன்மைகளும் சிவணிய கொடுந்தன்மை பெற்ற அந்நோயைப் பலர்பாலில் எடுத்துரைப்பார். அச் சூலைநோய் நஞ்சாக வந்து தன்னை நலிகின்றதென்றும் சுடுகின்றதென்றும் கூறிப் பின்னர், சூலைநோய் தவிர்த்ததிருப்பதிகத்தில் ஏழாம்பாசுரத்தில் அதை வர்ணிப்பதைக் காண்க:—

உயர்ந்தேன்மனை வாழ்க்கையு மொண்பொருளு
மொருவர்தலை காவ லிலாமையினால்,
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்!
பயந்தேயென் வயிற்றி னகம்படியே
பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே!

திருவதிகை வீரட்டானம், பண்-கொல்லி-7.

இவ்வாறு ஆண்மக்கள் செய்யக்கூடிய கொடுமையும் பெண்மக்கள் செய்யக்கூடிய கொடுமையும் ஒருங்குசேர்ந்துவதைக்கும் சூலையைப் பல்லோர் அறிசொல்லாய்ப் பிணியார்*...ஓடிப்போனார்" என்றனர். இதற்கு விதி:—

---

* பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கி
னாண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியுந்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியு
மிவ்வென வறியுமந் தந்தமக் கிலவே
யுயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.
(தொல் - சொல் 4)

† கால முலக முயிரே யுடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூத
ஞாயிறு திங்கள் சொல்லென வருஉ
மாயீ ரைந்தொடு பிறவு மன்ன
வாவயின் வருஉம் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா வுயர்திணை மேன.
தொல்-சொல்-57.

* ரஃகா னொற்றும் பகர விறுதியு
மாரைக் கிளவி யுளப்பட மூன்று
நேரத் தோன்றும் பலரறி சொல்லே.
தொல் - கிளவியாக்கம் . 7

"ஆடூஉ வறிசொன் மகடூஉ வறிசொற்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
யம்முப் பாற்சொ லுயர்திணை யவ்வே"

தொல்காப்பியம் - கிளவியாக்கம் சூத்திரம் 2

இயற்கையில் தோன்றும் தோற்றத்தை அனுசரித்து இலக்கணத்தில் பால்பிரிப்பதுவழக்கன்று. சொல்வோன்கருத்துக்கு இசையப் பெயர்ச்சொற்களுக்குப் பால்கள் பொருந்தும் என்பதைப் பவணந்தி விளக்கவில்லை. திணைபால்களுக்குக் கூறும் புறனடைச் சூத்திரத்தில் பவணந்தி, மக்கள் வகுப்பிலும் அஃறிணை ஏற்படுவதைக் கூறுகின்றார்:—

பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்
இருமையு மஃறிணை யன்னவு மாகும்."

எனவே, திணை பால்கள் செய்யுள் நடையிலும்கத்திய நடையிலும் ஏற்படுவது பொருள்களின் பெயர்களாலும் அவற்றின் பிரயோகத்தாலு மன்றி, பொருள்களின் தோற்றத்தால் அன்றென்பது நமது இலக்கணங்களின் துணிபாம்.

# யாப்பிலக்கணம்

[386-வது பக்கத் தொடர்ச்சி]

பாவினம்

இதுகாறும் பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல்போற் பலசொல்லாற் பொருட்கிட னாக உணர்வினில்வல்லோர் அணிபெறச் செய்வனவாகிய செய்யுள் இவை என்பதும், அவற்றிற்குரிய இலக்கணம் இன்னவென்பதும் ஆராய்வான் தொடங்கி, அவற்றுள் வேண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் பண்டைப் புலவர்பெருமக்களால் குறியீடு செய்யப்பட்டு வழங்குவனவாகிய பாக்களையும் அவற்றின் வகைகளையும், அவற்றின் வேறுபட்ட மருட்பாவையும்பற்றிக் கற்றோம். இனி முன்னர் ஓதிய நால்வகைப் பாவிற்கும் இனமென வழங்கும் தாழிசை, துறை, விருத்தம் என்பவற்றின் இலக்கணத்தைக் கற்போம்.

இனம் மூன்றும் அவ்வப்பாவினோடு கூடிப் பெயர் பெற்று நடக்கும். அவை அங்ஙனம் வழங்குங்கால், வெண்டாழிசை, வெண்டுறை, வெளி விருத்தம் எனவும்; ஆசிரியத் தாழிசை, ஆசிரியத் துறை; ஆசிரிய விருத்தம் எனவும்; கலித்தாழிசை, கலித்துறை, கலி விருத்தம் எனவும்; வஞ்சித் தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் எனவும் இவ்வாறு குறியீடிட்டுவழங்கப்படுமென அறிக.

ஒருபுடைத் தத்தம் பாவோடு ஒத்திருத்தலானும், ஒத்த தாழத்தால் இசைத்தலானும், பெரும்பாலும் ஒத்த பொருள்மேல் மூன்றாய்த் தாழ்ந்திசைத்தலானும், எல்லா அடியாலும் ஒத்து நடத்தலானும் தாழிசை என்பது காரணப் பெயராம்.

ஒருபுடைத் தத்தம் பாவிற்குத் துறை போன்று நெறிப்பாடுடையதாய் அமைதலானும், எல்லாத் துறைமேலும் இனிது நடத்தலானும் துறை என்பதும் காரணப் பெயராம்.

ஒருபுடைத் தத்தம் பாவிற்கு ஒத்த ஒழுக்கத்தானும், எல்லா அடியும் ஒத்தலானும், புராணம் முதலிய விருத்தம் உரைத்தலானும் விருத்தம் என்பதும் காரணப் பெயரேயோம். விருத்தம் என்பது வடமொழித் திரி சொல்லாம்.

இனி முதற்கண் தாழிசையின் இலக்கணத்தைக் கற்போம்:

வெண்பாவிற்கினமாகிய தாழிசை குறள் தாழிசை, வேண்டாழிசை அல்லது வெள்ளொத்தாழிசை என இரு வகைப்படும்.

(1) குறள் தாழிசை:—(a) பல சீரால் இரண்டடியாய் ஈற்றடி குறைந்து வருவதும்; (b) அளவொத்த [illegible] பொருளும் ஒழுகிய ஓசையு மின்றி வருவதும்; (c) செப்பல் ஓசையிற் சிதைந்து, வேற்றுத் தளை வரப்பெற்று, குறள் வெண்பாவிற் சிதைந்து வருவதும் குறள் தாழிசை எனப் பெயர் பெறும். இஃது இரண்டடியாய் வருதலின் குறள் வெண்பாவிற்கு இனமாமென உணர்க.

(a) குறள் தாழிசை

'நண்ணு வார்வினை நைய நாடொறு
நற்ற வர்க்கர சாய ஞானநற்
கண்ணினு னடியே யடைவார்கள் கற்றவரே.'

(இதில் முதலடி எண் சீருடையதாய் இருப்ப, இரண்டாமடி நாற்சீர் பெற்று, அளவிற் குறைந்து வந்தமை காண்க.)

"நீல மாகட லீடு வார்திரை
நின்றபோற் பொங்கிப் பொன்று மாங்கவை
காலம்பல காலஞ் சென்று செல்வர் யாக்கை கழிதலுமே."

(இதில் முதலடி எண்சீருடையதாய் இருப்ப, இரண்டாமடி அறு சீர் பெற்று அளவிற் குறைந்து வந்தமை காண்க.)

"பாவடி மதயானை மன்னர்மைம் பொன்னி
னீண்முடிமே னிலாவிய
சேவடி எங்கோமான் செழும்பொன் னெயிலவனே."

(இதில் முதலடி அறுசீருடையதாயிருப்ப, இரண்டாமடி நாற்சீர் பெற்று, அளவிற் குறைந்து வந்தமை காண்க.)

"தண்ணந் துழாய் ஆடச் சேர்த
வண்ண ஒதி கண்."

(இதில் முதலடி நாற்சீரானமைய, இரண்டாமடி முச்சீர் பெற்று, அளவிற் குறைந்து வந்தமை காண்க.)

(b) குறள் தாழிசை

"திடுதிம் மெனநின் றமுழா வதிரப்
படிதம் பயில்கூத் தருமார்த் தனரே."

"பிண்டியி னீழல் பெருமான் பிடர்த்தலை
மண்டிலந் தோன்றுமால் வாழி யன்னாய்!"

"என்னே செல்லுதி வாழி நங்காய்!
பொன்னே சொல்லுவன் போகு நங்காய்!"

"அறுவர்க் கறுவரைப் பெற்றாங் கவுந்தி
மறுவறு பத்தினி போல்வயி னீரே."

(இவ்வை ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளும் இலவாய் இரண்டடியுமொத்தவக் குறள் தாழிசை. இவை செந்துறைச் சிதைவுக் குறள் தாழிசை எனவும் படும்.)



(c) குறள் தாழிசை

"கோடல்மன்னு பூங்கானற் குயில்கள்மன்னு நீள்
நாடலரிதா மினியாம் நயந்து." [சோலை

"வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டையள் அல்லள் படி."

(இவை நாலசைச் சீரால் வந்தும், வேற்றுத் தளை விரவியும் செப்பலோசை யழிந்து வந்தமையால்குறள் தாழிசையாயினமை யறிக. இது சந்தழி குறள் தாழிசை எனவும் வழங்கப்படும்.)

(2) வெண்டாழிசை அல்லது வெள்ளொத்தாழிசை:- மூன்று அடிகளையுடையதாய் ஈற்றடி மூச்சீரால் முடிவது வெண்டாழிசை அல்லது வெள்ளொத்தாழிசை என வழங்கப்படும். இது வெள்ளோசை கொண்டு, வேற்றுத் தளை கலவாமல் (சிந்தியல் வெண்பா) ஒரு பொருள் மேல் மூன்றாயும்; வெள்ளோசை தழுவாமல் வேற்றுத்தளை கலந்து, ஒரு பொருள்மேல் ஒன்றாயும்; இரண்டு இணைந்தும்; மூன்றின் மிக்கும்; மூன்றடுக்கிப் பொருள் வேறாயும் அமைய வரும் என அறிக. இது சிந்தியல் வெண்பாவின் இனம் எனக் கொள்க.

வெண்டாழிசை

"அன்னா யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
பொன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் துறந்து விடல்."

"ஏடீ யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
நீடான் துறந்து விடல்.'

"பாவாய் அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் துறந்து விடல்."

(இவை வெள்ளோசை கொண்டு, வேற்றுத் தளை விரவாது [சிந்தியல் வெண்பா] ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்தமை காண்க.)

வெண்டாழிசை

"நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்."

இது வெள்ளோசை தழுவாமல், வேற்றுத்தளை விரவி ஒரு பொருள்மேல் ஒன்றாய் வந்த வெண்டாழிசை.

# பொதிகை நிகண்டு

## (இரண்டாம் பகுதி)

[413-வது பக்கத் தொடர்ச்சி]

தி

1244 திகையே திசையுஞ் சுணங்கு மாகும்.
1245 திகிரி வேயும் வெற்புந் தேருருளும்.
ஆழியும் வட்டமுங் கோகமு மையுந்
தேரு மெனவே செப்ப லாகும்.
1246 திங்கள் அம்புலியு மாதமுந் திங்களும்.
1247 திட்டை மேடுந் திண்ணையு முரலும்.
1248 திட்டி கண்ணுந் திலதமுந் திட்டியும்.
1249 திணை அகத்திணையுங் குலமு நிலமும்
புறத்திணையு மொழுக்கமும் புகல லாகும்.
1250 திணி காசினியுந் திணியு மாகும்.
1251 திண்ணம் பொய்யு மெய்யும் வலியும்.
1252 தித்தி குரங்கு மின்பமும் பையும்
தித்திப் பும்மெனச் செப்ப லாகும்.
1253 திதியே காத்தலு நிலைத்தலும் பக்கமும்.
1254 திமிர மிருளு நரகமு மாகும்.
1255 திரிதல் கெடலும் முலாவலு மாகும்.
1256 திருக்குகம் புடவையு முற்றமு மாகும்.
1257 திரையிடு திரையுந் திரைத்தலுங் கடலும்
ஆலையும் பூமியு மறைந்தனர் புலவர்.
1258 திருவே கலையுஞ் செல்வமுஞ் சிறப்பும்.
1259 திலகம் புண்டரமுஞ் சுட்டியு மெள்ளும்
சிந்தூ ரமுமஞ் சாடியுஞ் செப்புவர்.
1260 திலமஞ் சாடியு மெள்ளு மாகும்.
1261 திவாவே பகலு மாதித்தனு மாம்.
1262 திளைத்த லனுபவமு நெருங்கலு நிறைதலும்.

தீ

1263 தீத்தஞ் சாறுந் தேவனு மாகும்.
1264 தீத்தம் விழாவுந் தீர்த்தமு மாகும்.
1265 தீர்த்தன் சிவனு மாசானு மருகனும்.
1266 தீயே நெருப்புந் தீங்கு மாகும்.

து

1267 துகளே குற்றமுந் தூளு மாகும்.
1268 துச்சி லொதுக்கிடமுஞ் சூடு மாகும்.
1269 துஞ்சல் சோம்புஞ் சாவுந் துயிலும்
செறிவு நிலைபேறுஞ் செப்ப லாகும்.
1270 துடர் சொற்றொடர்பும் விலங்கு மாகும்.
1271 துடி கூதாளியும் ஏலமும் பறையும்
கால நுட்பமுங் குமர னுடலும்
கணையு மிதழும் கட்டுதலுந் துள்ளலும்.
1272 துடவை காவுந் தோட்டமு முழவும்.
1273 துடுப்புக் கையு மிளமுலையு மாகும்.
1274 துணையொப்பு மளவுஞ் சகாயமுந் துணைவியும்
உபயமு மெனவே யுரைக்க லாகும்.
1275 துணிசோதி நாளுந் துண்டமுஞ் சேர்மையும்.
1276 துண்டம் வதனமு மூக்குந் துகிலும்
சாரைப் பாம்பு முறியும் புண்மூக்கும்.
1277 துணங்கு நன்னாளு விழவு மறலும்.
1278 துணங்கை யல்லும் விழவுமோர் கூத்தும்
ஒருநா ளும்மென வுரைக்க லாகும்.
1279 துணையறை தூக்கமுஞ் சேதுவு மாகும்.
1280 துணைவன் மந்திரியுந் தோழனு மாகும்.
1281 துண்டில் மூங்கிலுஞ் சூழலு மாகும்.
1282 துணைதனில் துணிமடற் பொருளுந் தெளியும்.
1283 துத்தம் துத்தமும் வயிறும் பாலும்
யாழி னரம்புஞ் சுணங்கனு மோசையும்.
1284 துதியே யகிலுந் துதியு மாகும்.
1285 துத்தி நாளும் விழவும் செய்யும்
தேமலுந் துணங்கை யாடலுந் துத்தியும்
படப்பொறி யும்மெனப் பகர லாகும்.
1286 துப்பு செய்யும் பவளமுஞ் சுத்தமும்
பகையு முற்றமு மரக்கும் வனமும்

1891

அனுபவமும் வலியும் வண்ணமும் சோறும்
துணையு மாயுதங் களையுஞ் சொல்லும்.
1287 தும்பி வண்டுஞ் சுரையுங் கள்ளும்
யானையு மெனவே யறைய லாகும்.
1288 தும்பை போரும் வெற்றிலையுந் துலையும்.
1289 தும்பு சிம்புளுந் தோடு நாளும்.
1290 துரோணஞ் சிம்புளும் தும்பையும் பதக்கும்
காரிப் பறவையும் வில்லுங் கருதுவர்.
1291 துருத்தி யாற்றிடைக் குறையுந் தோலும்
துட்டையு மிலங்கையுஞ் சொல்லுவர் புலவர்.
1292 துருக்கங் குங்குமமுங் கானு மரணும்
கத்தூரியுங் கலக்கமுங்கழற லாகும்.
1293 துரங்கங் குதிரையு நாவாயு மாகும்.
1294 துலையே துலாமுந் தோற்றமு மேற்றமும்.
1295 துவக்குப் பிணக்கமும் பற்றுதலு முடலும்
தோலு மெனவே சொல்ல லாகும்.
1296 துவ்வுத லுய்த்தலு மார்ப்பத மாகும்.
1297 துவர்சிவப்பு மிகலும் பவளமுங் காட்டமும்
துவர்ப்பு மாக்கமுஞ் சொல்ல லாகும்.
1298 துவறல் உண்டலுந் தின்றலு மாகும்.
1299 துவைப் பிண்ணாக்கும் புளிங்கறியு மோசையும்
இறைச்சியு மெனவே யியம்ப லாகும்.
1300 துழாயே புல்லுந் துளபமு மாகும்.
1301 துளிபல் துளியும் மழையின் றுளியும்
அடைத்த லும்பெண் ணுமையு மாகும்.
1302 துள்ளல் கூத்தும் பாவி னோசையும்
மசகமு மெனவே வழங்க லாகும்.
1303 துளும்பல் அலைதலுந் திமிறலு மாகும்.
1304 துனியே கோபமும் புலவி நீட்டமும்
அந்தியுந் துன்பமு நோயு மாகும்.
1305 துன்னல் சேர்த்தலுஞ் செறிதலு மிடத்தலும்.

# வாழ்வு

இயற்கை விதியின்படி மனிதர் அனைவரும் சமத்துவமுடையவர். எல்லா மனிதருக்கும் பொதுவானதொழில் மனிதத்தனம். நல்ல கல்விப்பயிற்சியுடைய மனிதரெல்லோரும் அப் பொதுத்தொழிலை செவ்வியபடி நடத்துவார். தாம் பெற்று வளர்க்கும் பிள்ளையின் தொழில் எது என்று பெற்றோர் துணியுமுன், இயற்கைபோ அவனை மனிதனக இருக்கும்படி அழைத்துக்கொண்டிருக்கின்றது. வாழ்க்கையேதான் நீ நடத்தவேண்டிய தொழிலென்பதைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டும். ஒருவன் நீதிபதியாகவோ இராணுவ வீரனகவோ அல்லது பாதிரியாகவோ இருப்பதுகிடக்க அவன் முதலில் மனிதனயிருக்க வேண்டும். எவையெவை ஒருவனைச் சிறந்த மனிதன் ஆக்குமோ அவைகளையெல்லாம் அவன் கருத்துடன் கற்கவேண்டும். விதியோ அன்னவன் நிலையை மாற்றி வைக்கப் பற்பலவகைகளில் முயன்றாலும் அவ்விதியின் வேலையோ அவன்பால் வீணேயாகும். ஏனெனினில் அவன் எந்நிலை யடைந்தபோதிலும் மனிதத்தனத்திற்கு மாறுபாடில்லாத சரியான இடத்திலே தானிருப்பான்.........மனிதனும் அவனைச் சூழ்ந்திருப்பவைகளுமே ஆய்ந்து தெளிவதற்குரிய விடயம். நம்மில் யார் நன்மை தீமை யென்னும் இரண்டினையும் பொருட்படுத்தமால் வாழ்ந்து அமைகின்றனரோ அவரே நேரிய பயிற்சி பெற்றவர் என்று நான் கருதுகின்றேன். எனவே உண்மையான கல்வியென்பது வாழ்க்கையை நடத்தும் வகையில் இருக்கின்றதே அல்லாமல் வாய்கொண்ட மட்டும் அறவுரைகளை அளப்பதில் இல்லை. நாம் வாழ ஆரம்பிக்கையிற்றான் உண்மையில் கற்பதற்கு ஆரம்பிக்கின்றோம். நமது கல்வி நம்மிலேதான் துவக்கமாகின்றது.

ஜனங்கள் தங்கள் குழந்தைகளின் உயிரையே காப்பாற்றும் எண்ணமுடையவர்களாக இருக்கின்றனர். இது போதாது. வயதுவந்த மனிதனுகுங்கால் பல இடையூறுகளுக்கிடையே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே ஒரு குழந்தைக்கு நாம் கற்பிக்கவேண்டும். செல்வத்திலும் வறுமையிலும் தளராமல் வாழ்வதற்கு அவனுக்குத் தெரியவேண்டும். அவசியம் நேருங்கால் ஐஸ்லாந்தின் பனியிலும், மால்டாவின் தகிக்கும் வெயிலிலும் அவன் சலிக்காமல் வாழ்வதற்குரிய மனம் பெறவேண்டும்.

நமது மக்களை மறலியின் கையிலிருந்து காப்பாற்ற நாம் வீணே முயல்கின்றோம். ஒருவன் ஒரு நாள் சாக வேண்டியவனே. சாவைவிலக்குவதற்குக்கற்பிப்பதைக் காட்டிலும், இருக்கின்றபொழுது செவ்வனே வாழ்வதற்குக் கற்பிக்கவேண்டும். வாழ்வு என்பது விடுகின்ற மூச்சு அன்று. நமது மனம், புத்தி, அறிவு, மற்ற அங்கங்களின் சலனம் அது. நாம் இருக்கின்றோம், என்னும் நினைவை உண்டாக்குகின்ற இந்திரியம் அறிவு சக்தி முதலியவைகளே வாழ்வெனப்படுவதாகும். வாழ்வு என்பது நாம் நேரியபடி வாழ்கின்ற நினைவினில் இருக்கின்றதல்லாமல் நீண்ட ஆயுளில் அடங்கவில்லை. ஒருவன் நூறு வருடம் உயிரோடிருந்திருந்திருக்கலாம், எனினும் அவன் வாழ்ந்தநாள் ஒன்றும் இல்லாமலிருக்கலாம். அன்னவன் அவ்வளவு காலஅளவு உயிரோடிராமல் இளமையிலேயே மாண்டிருத்தல் நலம்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

| | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |

குழந்தைகளுக்கு

| | |
|---|---|
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |




தைலங்கள்:

| | | |
|---|---|---|
| சந்தனாதி | 6 அவுன்ஸ் ரூ. | 1-0-0 |
| அமிர்தாமலக | ,, | 0-12-0 |
| பிருங்காமலக | ,, | 0-12-0 |

ஸ்திரீகளுக்கு

| | |
|---|---|
| ஸுதக டானிக் | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. எ. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்ததிறமனைத்து எண்ணெய் காஸ்டராலதீ

ஜ்வரேக் ஸகல எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]





## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முடவனுக்கு முயல் வேண்டா. விளம்பிறைல் வெட்கக்கேடு. கல்லாதம்பர்களை நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி. விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**— K. இராஜகோபாலாசாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம் பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்ற பல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினும் அருமை 4 மறப்பது முறுதியாமே: கள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

**களவியற் காரிகை:**—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழ்ப்பிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எட்டுப்பெட்டிகளுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயா, தென்னாப்ரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜுக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

## எமது புதிய பிரசுரங்கள்

### சோவியத் ருஷியா.

இது பண்டிதர் ஜவஹரிலால் அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. ஏழை, பணக்காரன், ஆள்பவன், ஆளப்படுபவன், ஆண் பெண் என்னும் ஏற்றத்தாழ் வில்லாதபடி, குடிவாழ்க்கை ருஷியாவில் அமைக்கப்பெற்றுளதெனக் கூறப்படும் தற்கால ருஷியசரித்திரமாகும் இது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

### இராட்டூர் வீரன் துர்க்காதாஸ்.

வங்காளக் கவி பாபு துவிஜேந்திரலால் எழுதிய நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இரஜபுத்திரர் வீரத்தையும், அவர்களது இராஜ விசுவாசத்தையும் இந் நாடகம் புலனாக்குகின்றது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

### சுப்பிரமணிய பாரதியார்.

தமிழ் நாட்டின் தேசியக் கவி என்று கொண்டாடப் பெறும் ஸ்ரீமான் பாரதியாரின் நூல் ஆராய்ச்சியாகும் இது. விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

பாரதி புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## திரு அருட்பா

பி. ஏ., எம். எல்., அட்வொகேட்,

ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு

ஒன்றே

சுவாமிகள் கை எழுத்தைக்கொண்டு அச்சிட்டது!

ஆகையால், பிழை முதலிய விபரீதங்கள் இல்லாததும் நூதன விஷயங்கள் எல்லாம் கொண்டதும் இப்பதிப்பே!!

ஏற்ற பெற்றி பாகுபாடு செய்யப்பட்டு, அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு விளங்கும் இப் பதிப்பின் பகுதிகள் அடக்க விலையில் கிடைக்கும்!!!

6-வது தனிப் பாசுரப் பகுதி

(பல மத ஸ்தோத்திரங்கள்-தபால் செலவோடு 6 அணா அனுப்புதல் வேண்டும்.)

## ANCIENT JAFFNA

**Mudaliar C. Rasanayagam C. C. S.**

An anthentic history of Jaffna based on archeological, Epigraphic and Linguistic researches.

**Rs. 5 8 0 Postage extra.**

KALANILAYAM
**Vellala Street, Purasawalkam, Madras.**

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

## — பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

### தமிழகராதி ஆதார நூற்றொகுதி நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

### அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

### கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

### திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணா 0-12-0

### களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களை யுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

### நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. கற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

### இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

### தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணா 0-6-0

**கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.**




# வர்த்தமானம்

**சுதேசி மோட்டார்:**—கல்கத்தா கார்ப்பொரேஷனின் உபயோகத்திற்காக விபின பிகாரி என்னும் வங்காளி யொருவர் ஒரு சுதேசி மோட்டார் செய்து வருகின்றார் என்றும் இவ்வாண்டிற்குள் வண்டிகள் செய்துமுடிந்துவிடுமென்றும் தெரிகின்றது.

***

**செய் குன்றம்:**—ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் என்னுமிடத்தில் ஒரு செய்குன்றம் கட்டிவருகின்றனராம். இதனில் மரங்களும் செடிகளும் பயிரிடப்படுமாம். இது விக்டோரியா மஹாராணியின் ஞாபகார்த்தமாக அமைக்கப்படுகின்றதாம்.

***

**ஐந்துகுழந்தை:**— இத்தாலியில் ஒரு கிராமத்தில் வசிக்கும் ஒரு தொழிலாளியின் மனைவி சேந்தாற்போல் ஐந்து குழந்தைகளைப் பெற்றாள் என்றும், அவைகளில் மூன்று ஆண் குழந்தைகள் என்றும் இரண்டு பெண் குழந்தைகள் என்றும் தெரியவருகின்றது.

***

**வென்னிஸ் பாலம்:**—வென்னிஸ் தீவுகளுக்கும் மற்றப்பகுதிக்கும் இடையில் 2½-மைல் தூரம் ஜலம் இருப்பதனால் வாகனப் போக்குவரவு வசதியில்லாதிருக்கின்றது. இதை உத்தேசித்து இத்தாலிய அரசாங்கத்தார் ஒரு பெரிய பாலத்தைக் கட்டிவருகின்றனர். பாலத்தின் நீளம் 3 மைல். 300 கணவாய்களை அப்பாலம் கொண்டிருக்கின்றது. இப்பாலத்திற்கு 1 கோடியே 22 லட்சம் பவுன் செலவாகும். இப்பாலத்தின் அகலம் 73 அடி.

***

**ஏசுநாதர் அங்கி:**—ஏசுநாதர் அணிந்திருந்த ஒரு அங்கி அகப்பட்டுள்ளதாம். அதை ஜெர்மனியில் கண்காட்சிச் சாலையில் வைக்கப்போகின்றார்களாம்.

***

**122 பெண்களை மணந்தவர்:**—சிரியாவைச் சேர்ந்த பெயரக் என்னுமிடத்திலுள்ள 150வயதுடையவயோதிகர் ஒருவர் ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:—"நான் துருக்கிஸ்தானத்தைச் சேர்ந்தவன். என் பேர் பாதிக்ஆக். பிரான்ஸ்தேசத்தில் நடந்த விடுதலைப்புரட்சி ஏற்படுவதற்கு 6 வருடத்திற்கு முன் நான் பிறந்தேன். இப்பொழுது என் வயது 150. நான் 122 பெண்களை மணந்துகொண்டேன். என் மனைவிகளில் ஒருத்தி 15 குழந்தைகளைப் பெற்றாள். இன்னும் நான் என்னுடைய காரியங்களைச் செய்து வருகின்றேன். இன்னும் தள்ளாமை என்னிடம் ஏற்படவில்லை. இப்பொழுது உலகத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. செல்வத்தின் மிகுதியும் வியாபாரப் பெருக்கமும் இப்பொழுது இருக்கின்றன எனினும், மாந்தரிடம் அடக்கமும் அமைதியும் திருப்தியும் தயையும் இப்பொழுது இல்லாமற் போய்விட்டது."

***

**யுத்தத்தில் சீனப் பெண்கள்:**—இப்பொழுது மஞ்சூரியாப் பகுதியில் சீனருக்கும் ஜப்பானியருக்கும் நடக்கும் யுத்தம் நாளுக்குநாள் வளர்ந்தே வருகின்றது. சீன மாதர்கள் இப்பொழுது இராணுவத்தில் சேர்ந்து யுத்தமுனை செல்கின்றனராம். இன்னும் பல மாதர் இராணுவப்பயிற்சி பெற்றுவருகின்றனர்.

***

**செட்டிநாட்டில் கதர் உற்பத்தி:**—சிவகங்கைக் கருகிலுள்ள அலவக்கோட்டை வாசியான P.N. சொக்கலிங்கம் செட்டியார் என்னும் தனவைசிய கனவான் அவ்வூரில் ஒரு கதர் உற்பத்திச் சாலையைப் பல நண்பர்களின் துணைகொண்டு ஸ்தாபித்து இருக்கின்றனராம். அவ்வூரில் நூற்கப்பெற்ற நூலைக் கொண்டு துணிகள் அக் கதர்ச்சாலையில் நெய்யப் பெறுமாம்.

***

**காளியின் கோபம்:**—வங்காளத்திலுள்ள பரிதிபூர் என்னுமிடத்திற்குச் சமீபத்தில் சந்துகாட் என்னும் பெயருடைய நாட்டுப்புறத்தில்ஒருகாளிகோயில் இருக்கின்றது. ஒருமுஸ்லிம்வாலிபன் அக்கோயிலிற்குள் புகுந்து காளிவிக்ரகத்தை உடைத்துவிட்டானும். இது இந்துக்களிடம் பரபரப்பையும் கோபத்தையும் உண்டாக்க, அவ்வாலிபனுடைய தகப்பனார் புதிய விக்ரஹகம் செய்து கொடுப்பதாகக் கூறினாராம். நெடுநாள் வரை அவர் சொன்னபடி செய்யாது போகவே அவ்வாலிபன் பாம்பு கடித்து இறந்தான் என்றும் இப்பொழுது இறந்த பையனுடைய தகப்பனார் விக்கிரஹம் செய்வதற்கும் மற்றச் செலவுக்கும் பொருள் கொடுக்கச் சம்மதித்திருக்கின்றார் என்றும் கல்கத்தாச் செய்தி கூறுவதாக லோகோபகாரிப் பத்திரிகை கூறுகின்றது.

***

**ஏலம்:**—தஞ்சை ஜில்லாவில் நன்னிலம் தாலுக்காவைச் சேர்ந்த திருச்சங்கட்டாங்குடி என்னும் சிவக்ஷேத்திரத்தைத் தென்னாட்டார் யாவரும் அறிவர். அங்குத்தான்சிறுத்தொண்டநாயனார் தமதுஅருமை மகனைக் கறிசெய்து சிவபிரானுக் களித்தார். அந்தக் க்ஷேத்திரத்திற்குச் சொந்தமான நிலங்களுக்குக் கட்டவேண்டிய நிலவரி 1200 ரூபாயைத் தேவஸ்தானக் கமிட்டியார் செலுத்தவில்லை என்று ரெவினியூ இலாகா அதிகாரிகள் நிலத்தை ஏலத்திற்குக் கொண்டுவந்தார்கள். கோயில்நிலமானபடியால் பொது ஜனங்கள் ஏலம் எடுக்க முன்வரவில்லை. ஆகவே ரெவினியூ இலாகாதாரர் அந்நிலங்களை 1-4-0 ரூபாய்க்கு எடுத்துக்கொண்டனராம்.

***

இரங்கூனிலுள்ள நாட்டுக்கோட்டை செட்டியார்கள் தங்களுக்குச் சொந்தமான கோயில்களில் தீண்டாதார் பிரவேசத்திற்கு அனுமதி கொடுத்துவிடத் தீர்மானித்துவிட்டனர் என்று தெரிகின்றது.

***

**பெரியகடிகாரம்:**—பாரிசிலுள்ள எபல்கோபுரம் என்னும் ஒரு பெரிய கோபுரத்தில் ஒரு பெரிய கடிகாரம் வைக்கப்பட்டிருக்கின்றதாம். உலகத்திலுள்ள கடியாரங்கள் எல்லாவற்றையும்விட இது பெரியதாம். கடிகாரத்தின் சுற்றளவு 66 அடியாம். பகலிலும் இரவிலும் இக்கடிகாரத்தில் மணிபார்க்கஇயலுமாம்.

***

**அற்புத மரம்:**—தஞ்சை ஜில்லாவில் மன்னார்குடியில் கம்மாளர் இடுகாட்டிற் கருகாமையில் ஒருமரம் இருக்கின்றதாம். நோயாளிகள் அம்மரத்திற்குத் தூபதீபமிட்டு வணங்க அவர்கள் நோய் தீர்ந்துவிடுகின்றதாம். நடு இரவில் ரிஷிகள் அங்கு வந்துபோவதாகவும், அதனாற்றான் அம்மரத்திற்கு இச்சக்தி யிருக்கின்றதென்றும் ஜனங்கள் சொல்லுகின்றனராம்.

***

**தீண்டாமை இயக்கமும் மதமாற்றமும்:**—இப்பொழுது இந்தியாவெங்கும் நடந்துவரும் தீண்டாமை இயக்கத்தின் பயனாக மதுரை ஜில்லாவிலுள்ள தாழ்ந்த வகுப்பினரில் பலர் கிறிஸ்தவ மதத்தையும்,இஸ்லாம் மதத்தையும் தழுவி வருகின்றனர் என்று மதுரைச்செய்தி கூறுகின்றது. மதுரைக்கருகிலுள்ள அழகாபுரி என்னும் ஒரு கிராமத்தில் சமீபத்தில் 10 குடும்பத்தினர் இஸ்லாம் [illegible] தழுவினராம்.

KALANILAYAM
Reg. No. M. 2324.


# — கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு
முதலியவைகளுடன்

---

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆசியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

## ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஒளஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆறெழுத்தந்தாதி:—அகத்திய முனிவர் அருளிச் செய்த இவ் வாறெழுத்தந்தாதி முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் தன்னுள் அடக்கியதென்று கருதப்படுகின்ற 100 செய்யுள்களைக் கொண்ட நூல். இது டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களின் உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை அணா 12. தபால் செலவு வேறு.

---

பெருமாள் திருமொழி:—(குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தது.) ஸ்ரீமான் பு. ப. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் இயற்றிய பதவுரை, இலக்கணக் குறிப்பு சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்த்தது. நாலாயிரப் பிரபந்தம் பயில விரும்புவோர்க்கு இது மிகுந்த உதவி தரும். விலை:-கலிகோ 1-4-0, சாதா 1-0-0. தபால் செலவு வேறு.

கலாநிலயம்
வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

---

New Business Completed
During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000
received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children. }

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed .... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI,
Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI,
Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)